ISSN 1391-9504




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# திருகோணமலைக்கு வந்த ஆங்கிலேயக் கப்பல்

தஞ்சாவூர் நாட்டிற்குப் பிரவேசிக்கும் மார்க்கமான நாகப்பட்டிணம் ஆங்கிலேய கடற்படையினரால் முற்றுகை இடப்பட்டது. அங்கிருந்த ஆங்கிலேய கடற்படையின் கப்பல் ஒன்று திருகோணமலையை நோக்கி அனுப்பப்பட்டது. கி.பி.1781 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 11 ஆம் திகதி இங்கிலாந்தில் இருந்து தரையிறங்கிய மேலதிக படைகள் நாகப்பட்டிணத்திற்கு அனுப்பப்பட்டன. அப்படையினர் அந்நகரை நோக்கி கடுமையான பீரங்கித் தாக்குதல்களை நடத்த ஆரம்பித்தனர்.

இதேவேளை, ஜனவரி மாதத்தில் சேர். எட்வர்ட் ஹியுஸ் அவர்களின்கீழ் ஆங்கிலக் கப்பல் படை அணியொன்று இலங்கைக்கு வந்தது. கி.பி.1788 ஜனவரி மாதம் ஐந்தாம் திகதி திருகோணமலை கோட்டையை அப்படைகள் கைப்பற்றின. அதன்பின் ஆறு தினங்கள் கழித்து 'ஒஸ் டென்பர்' கோட்டையும் ஆங்கிலேயரினால் கைப்பற்றப்பட்டது.

சென்னையின் ஆள்பதியான மெக்கார்த்தினி அவர்களுக்கு படிப்படியாக கொழும்பைச் சுற்றி வளைக்க வேண்டுமென்பதே நோக்கமாக இருந்தது. அதனை நிறைவேற்றும் பொருட்டு, முதல் நடவடிக்கையாக கண்டி மன்னருடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்த்திருந்தார். திருகோணமலையில் இருக்கும் ஆங்கிலேய சேனைக்கு உணவு மற்றும் பானம் என்பனவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கமாகும். அத்தோடு, ஆக்கிரமிப்புக்காக வரும் தமது படையினருக்கு உதவிகளைப் பெறுவதும் இந்த ஒப்பந்தத்தின் மற்றொரு நோக்கமாகும். இவ்வாறு காட்டிக்கொண்டாலும் அவர்களிடம் வேறொரு தூர நோக்கும் இருந்தது. அதாவது கண்டி மன்னனிடம் இருந்து திருகோணமலையை ஆங்கிலேயரின் பயன்பாட்டிற்காகப் பெற்றுக்கொள்வதாகும். அவ்வாறு பெற்றபின் ஒல்லாந்திற்கும் இங்கிலாந்திற்கும் இடையில் சமாதானம் ஏற்பட்டால் ஒல்லாந்தரிடம் இருந்து கைப்பற்றிய இடங்களை அவர்களுக்கு மீண்டும் கொடுத்தாலும் திருகோணமலையை மீண்டும் கையளிக்காமல் இருப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வருடம் 22,700 உள்நாட்டு மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுவர்



2010/2011 கல்வியாண்டுக்காக 22,700 மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக் கொள்ளவுள்ளதாக அறியக்கிடைக்கின்றது.

முன்னர் 21,495 மாணவர்களையே பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும், தற்போது, அத்தொகையை 22,700 வரை அதிகரிக்கவுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பீ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் அந்தந்தக் கற்கைநெறிகளுக்கு நிலவும் வெற்றிடங்களை ஆராய்ந்த பின்னர், இந்த மேலதிக மாணவர்கள் 1,205 பேரும் அனுமதித்துக்கொள்ளப்படவுள்ளனர். இந்த மாணவர்களில் விசேட திறமைகள் உள்ள மாணவர்களும் அடங்குகின்றனர். அத்துடன், இவ்வருடம் பல்கலைக்கழகங்களில் உள்நாட்டு மாணவர்களுக்கு மேலதிகமாக 1,000 வெளிநாட்டு மாணவர்களும் அனுமதித்துக்கொள்ளப்படவுள்ளனர். அதன்படி, சகல பல்கலைக்கழகங்களுக்கும் அனுமதித்துக்கொள்ளப்படவுள்ள மொத்த மாணவர் தொகை சுமார் 23,700 ஆக இருக்கும் என உயர் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.




அனர்த்த பாதுகாப்பு:

## வடக்கு, கிழக்கு பாடசாலைகளில் விசேட பயிற்சி

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அனர்த்த பாதுகாப்பு தொடர்பாக விசேட பயிற்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன், ஜேர்மன் சர்வதேச கூட்டுத்தாபனத்தினால் செயற்படுத்தப்படுகின்ற இந்த பயிற்சித்திட்டத்தில், வட மாகாணத்தின் 12 கல்வி வலயங்களுக்குட்பட்ட 70 பாடசாலைகளும் கிழக்கு மாகாணத்தின் 15 கல்வி வலயங்களுக்குட்பட்ட 177 பாடசாலைகளும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முதலில் ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறையில் இடி-மின்னல், மண்சரிவு, மழை, கடல்கோள் அனர்த்தம், சூறாவளி, வெள்ளப்பெருக்கு மற்றும் காட்டு யானைகளின் தாக்குதல் போன்ற அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்புப் பெறுதல், ஏனையோரைப் பாதுகாத்தல் என்பன பற்றி அறிவுறுத்தப்படுகின்றன. அத்துடன், அனர்த்தம் பற்றிய முன்னறிவிப்பு, அனர்த்தத்தில் சிக்கியிருக்கும்போது, தப்பிக்கும் முறைகள் என்பன பற்றிய அறிவுரைகளும் வழங்கப்படுகின்றன. பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மூலமாக, மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படவுள்ளது.



பயிற்சியை முடித்துக்கொள்ளும் பாடசாலைகளுக்கு அனர்த்த முன்னெச்சரிக்கைக் கருவிகள் மற்றும் முதலுதவிப் பொருட்கள் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

## சட்டவிரோதமாக இயங்கிவரும் சிறுவர் இல்லங்கள் இனங்காணப்பட்டன

நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட ஆய்வொன்றினை அடுத்து, பதிவு செய்யப்படாமல் சட்டவிரோதமாக இயங்கிவரும் 75 சிறுவர் இல்லங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாக சிறுவர் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் சரத் அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.



இதனை அடுத்து, சட்டவிரோதமாக இயங்கிவரும் மேற்படி சிறுவர் இல்லங்களை உடனடியாக பதிவு செய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் சில சிறுவர் இல்லங்கள் பராமரிப்புக்கு தகுதி அற்றவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சகல பாடசாலைகளிலும் தொகை மதிப்பீட்டுப் பணிகள்



நாட்டிலுள்ள சகல அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளிலும் இவ்வருடத்திற்கான தொகை மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேகர தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதம் முதலாம் திகதியளவில் ஆரம்பிக்கப்படுகின்றன. அதன்படி, நாடளாவிய ரீதியிலுள்ள 10,286 பாடசாலைகளில் இவ்வருடத்திற்கான தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் தொகை மதிப்பீட்டில் பெறப்படும் மாணவர் எண்ணிக்கை மற்றும் ஏனைய வளங்களை மையமாக வைத்தே கல்விக்கான உள்ளீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

30 நாட்கள் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் இவைகள் வழங்கப்படும்
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773 - 123 523 க்கு SMS செய்யுங்கள்.
10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
Dialog Sim Card ஒன்று Video CD வழிகாட்டி புத்தகம் /
அடையாள அட்டை Diploma in English சான்றிதழ் ஒன்று
என்பன எலலா மாவண/மாணவிகளுக்கும். வழங்கப்படும்.

எமது DIPLOMA சான்றிதழ் உங்கள் திறமையை வெளிக்காட்டுவதுடன் எதிர்கால உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பபை பெற மற்றும் நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உலக சமூகப் பிரச்சினைகளில் வன்முறைகளும், போதைப்பொருள் பாவனையும் முக்கிய இடம் வகிக்கின்றன. மதம், மொழி, கலாசாரம் அனைத்தையும் கடந்து அனைவருக்கும் பொதுவான பிரச்சினைகளாக அவை உருவெடுத்துள்ளன*

# போதைப்பொருள் பாவனையும் தடைசெய்தலுக்கான முன்னெடுப்புகளும்



### சமூகச் சீர்கேடுகளின் நுழைவாயில்

போதைப்பொருள் பாவனையின் நுழைவாயிலாகக் கருதப்படுபவை புகைப்பிடித்தலும் அதனோடு இணைந்த மதுபானப்பாவனையுமே ஆகும். இவை இரண்டும் உலக நாடுகள் அனைத்திலும் வியாபாரப் பண்டங்களாக அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, உலக அரசுகளுக்கு வருவாய் தேடித்தரும் தொழில்துறைகளாகவும் காணப்படுகின்றன. இவற்றின் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பல்வேறு தடைச்சட்டங்களை காலத்துக்குக்காலம் ஏற்படுத்தியபோதிலும், இவற்றை முற்றாகத் தடைசெய்வதற்கான சட்டங்களை எந்த நாட்டு அரசாங்கமும் இதுவரை மேற்கொண்டதாக இல்லை என்பதே வருத்தத்திற்குரிய விடயமாகும்.




### புகைத்தலால் ஏற்படும் நோய்களும் மரணங்களும்

ஒரு நாட்டிற்கோ, சமூகத்திற்கோ தேவைப்படுவது நல்ல ஆரோக்கியமுள்ள மக்களே. ஆரோக்கியத்தைக் கெடுக்கின்ற பொருட்களை நாம் போதைப்பொருள் பட்டியலுடன்தான் சேர்க்கவேண்டும். அந்த வகையில், புகைத்தலும் ஒரு போதைப்பொருளே. இதற்கமைய, சிகரெட், சுருட்டு, பீடி என்பன புகைத்தலுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. வருடாந்தம் மே மாதம் 31 ஆம் திகதி புகைத்தல் தடுப்புத் தினமாக்கப்பட்டு புகைத்தலால் ஏற்படும் கெடுதிகள் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றன.

அண்மைக்காலமாக, அரசாங்கம் கொண்டு வந்துள்ள சட்டங்களின்படி, 21 வயதிற்குக் குறைந்தோருக்கு சிகரெட், பீடி, சுருட்டு விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதோடு, எவரும் பொது இடங்களில் புகைத்தலும் தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டுள்ளது. அத்துடன், புகைத்தலால் ஒவ்வொரு பத்து நிமிடத்திற்கும் ஒருவர் மரணமடைவதாகக் கூறப்படுகின்றது. அந்த வகையில், வருடாந்தம் 30 லட்சம் பேர் பலியாகின்றனர். புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய 43 வகையான பதார்த்தங்களைப் புகையிலை கொண்டிருக்கின்றது. புகைபிடித்தலால் 25 இற்கும் மேற்பட்ட நோய்கள் ஏற்படுகின்றன. ஒருவர் புகைபிடிப்பதன்மூலம் அவரை விடவும் அதிகமாகப் பாதிக்கப்படுவோர் அவரைச் சுற்றிவாழ்கின்றவர்களே. புகைபிடித்தலில் ஈடுபடுகின்ற ஒருவர் வெகு விரைவில் தடைசெய்யப்பட்ட போதைப்பொருள் பாவனைக்கும் அடிமையாகிவிட வாய்ப்பேற்படுகின்றது.




### மதுபானத்தால் ஏற்படும் சமூக சீர்கேடுகள்

மதுபானம் நம் நாட்டில் தொன்றுதொட்டு பரவலாகப் பாவிக்கப்படுகின்ற ஒரு போதைப்பொருளாகும். இது சமூகத்திற்கு ஒரு சாபக்கேடு என்றே கூறவேண்டும். நாள்முழுவதும் கஷ்டப்பட்டு வேலை செய்து கிடைக்கின்ற கூலியில் பாதிப்பங்கை மதுபானத்தில் செலவிட்டு வீடு செல்லும் குடும்பஸ்தரினால் வீட்டில் நிம்மதி கெடுகின்றது. பிள்ளைகள் ஒழுங்காகப் படிக்க முடிவதில்லை. வீட்டில் பெற்றோர் சண்டை. இதுவும் பிள்ளைகளைக் கல்வி கற்பதிலிருந்தும் தூரமாக்கி விடுகின்றது.

மது பாவனையாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கில் மதுப்பாவனையாளர் ஒருவர் விபத்துக்குள்ளாகி அல்லது நோய்வாய்ப்பட்டு அரச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டால், அவர்களிடம் 2000 ரூபாய் அறவிடும் திட்டத்தை இந்த ஆண்டிலிருந்து அமுலுக்குக் கொண்டு வரப்போவதாக சுகாதார அமைச்சு அறிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், இலங்கையில் இடம்பெறுகின்ற வாகன விபத்துக்களில் 80% மது அருந்திவிட்டு வாகனம் செலுத்துவதனாலேயே ஏற்படுகின்றன என்பதை அண்மைக்காலப் புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. நீரிழிவு, புற்றுநோய், சிறுநீரக நோய்கள், இதயநோய் போன்றவற்றில் 60% மதுவினாலும், புகைத்தலினாலும் ஏற்படுகின்றன. இலங்கையில் மதுவுக்கு முற்றுப்புள்ளித் திட்டம் கொண்டுவரப்பட்டு ஆறு வருடங்கள் கழிந்துவிட்ட நிலையிலும், மதுப்பாவனையாளர் எண்ணிக்கையில் அல்லது உற்பத்தி, இறக்குமதிகளில் இதுவரை மாற்றங்கள் நிகழாமை வருந்தற்குரியதே.

### தடை செய்யப்பட்ட போதைப்பொருட்கள்

ஒவ்வொரு வருடமும் போதைப்பொருள் பாவனை எதிர்ப்பு தினமாக ஜூலை 31 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. உலக நாடுகள் அனைத்திலுமே தடைசெய்யப்பட்ட போதைப்பொருளாக ஹெரோயின்,கஞ்சா, அபின், ஹஷீஷ், பாபுல் போன்றவை கொள்ளப்படுகின்றன. உலக நாடுகள் பலவற்றில் போதைப் பொருள் வைத்திருப்பது தூக்குத் தண்டனைக்குரிய குற்றமாகவும் கருதப்படுகின்றது.



இறுதியாகக் கிடைக்கப் பெற்ற தகவலின்படி, 2010 ஒக்டோபர் மாதத்தில் மாத்திரம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடாத்தப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின் போது, போதைப் பொருள் தொடர்புடைய 12,030 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இவ்வாறான குற்றங்கள் தொடர்பாக 12,500 சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது. தவிர, இவ்வாறான சுற்றிவளைப்பின் போது 10,306 கிலோ எடையுள்ள பல்வேறு வகையான போதைப் பொருட்கள் கைப்பற்றப் பட்டுள்ளன.



### பாடசாலை மட்டத்தில் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கை

பாடசாலை மட்டத்தில் போதைப் பொருள் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அறிந்த பொலிஸாரும், கல்வியமைச்சும் நாட்டின் சகல பாடசாலைகளிலும் போதைப் பொருள் தடுப்புக் குழுக்களை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அளவுக்கதிகமான பணப்புழக்கம், பிள்ளைகளின் அன்றாட நடவடிக்கைகளைப் பெற்றோர் கண்காணிக்காதிருத்தல், பரம்பரையாக வந்த போதைப்பொருள் நுகருணர்வு, சுய அடைவு குறைதல், புதிய விடயங்களில் ஆர்வம் காட்டும் இயற்கையுணர்வு, சமூகப் புலக்காட்சிகள் முதிர்ச்சியடையாமை, சமவயதுக் குழுவில் தீவிர உறுப்புரிமை, கற்பதில் ஆர்வமின்மையும், பாடசாலையை வெறுத்தலும், ஆத்மீக விழுமியங்களில் அலட்சியமும், தமது மதக்கிரிகைகளில் ஆர்வமின்மையும், குடும்பப் பிரச்சினைகளிலிருந்து தற்காலிகமாக விடுபட்டு விடுவதில் ஆர்வம், சூழலில் போதைப்பொருட்களின் இருப்புப் போன்ற காரணங்கள் மாணவர்களது போதைப்பொருள் பாவனைக்கு வலுவூட்டுவதாக உளவியலாளர்கள் கருதுகின்றனர்.

பிள்ளைகளிடத்தில் பணப் புழக்கத்தை அதிகரிக்கச் செய்யாதிருத்தலும், தமது பிள்ளைகள் எவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள், எப்படிப்பட்ட நண்பர்களோடு பழகுகின்றார்கள் என்பதைக் கண்காணித்தலும் பெற்றோர்களின் முக்கிய கடமையாகும். சமூகத்தில் உள்ள மாணவர்கள் அனைவருக்குமே அவரவர் மதங்கள் பற்றிய அறிவையும், மதக்கிரிகைகளை நிறைவேற்றுவதில் ஆர்வத்தை ஏற்படுத்தலும், ஆசிரியர், பெற்றோர் உட்பட அனைவரினதும் கடமையாகும்.



போதைப்பொருள் வியாபாரம், போதைப்பொருள் பாவனை என்பவற்றைக் கட்டுப்படுத்துவதைவிட, அவற்றை இல்லாமல் செய்வதே சிறப்பான சமூகத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த வழியாகும்.

ஸல்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

## முகாமைத்துவம் - 65

### கற்றலுக்கான ஆலோசனைகள்

# பாடங்களைத் தெரிவுசெய்தல்




**கல்வியைச் சிறப்பாகக் கற்றுக் கொள்வதில் பாடங்கள் முன்னணியில் திகழ்கின்றன. கல்வியின்மூலம் பயனடைய வேண்டுமாயின், ஒவ்வொருவரும் தமக்கு உகந்த பாடங்களைத் தெரிவுசெய்தல் வேண்டும். இவ்வாறு தெரிவுசெய்யும் பட்சத்தில்தான் கல்வியை இலகுவாகக் கற்கவும் சிறந்த பயனை அடையவும் முடியும்**

எமது நாட்டைப் பொறுத்தவரையில், பாடத் தெரிவு என்பது பெரும்பாலும் தரம் 9 அல்லது க.பொ.த. சாதாரண தரத்திலிருந்தே முதலில் இடம்பெறுகின்றது. பின்னர் க.பொ.த. உயர்தரம், ஏனைய வெளிவாரிப் படிப்புக்கள், உயர் கல்லூரிகள், பல்கலைக்கழகம் என அது தொடர்கின்றது. எனவே, இவ்வகையான சந்தர்ப்பங்களில் பாடங்களைத் தெரிவுசெய்வதற்கு மாணவர்களுக்கே சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. இது மாணவர்களது தனிப்பட்ட உரிமையும் கடமையும் ஆகும்.






பாடங்களைத் தெரிவுசெய்வதற்கான வாய்ப்பு மாணவர்களுக்கு வழங்கப்படுவதன் பிரதான நோக்கம்; அவர்களிடம் இருக்கும் பல்வேறு திறமைகளை அபிவிருத்தி அடையச்செய்து, சமூகத்தின் கண்கொண்டுவருவதும் நாட்டின் அனைத்துத் துறைகளையும் அபிவிருத்தி அடையச் செய்வதும் ஆகும். எனவே, அந்த வாய்ப்பைத் திறம்படக் கையாளவேண்டியது மாணவர்களின் கடமை ஆகும்.

#### பாடத்தைத் தெரிவுசெய்யும் போது கவனத்திற்கொள்ள வேண்டியவை

◆ ஒரு பாடத்தைத் தெரிவுசெய்யும்போது, உங்களது நிலையை நீங்கள் பரீட்சித்துப் பாருங்கள். நீங்கள் தெரிவுசெய்யும் பாடத்தை உங்களால் கற்க முடியுமா? எனச் சிந்தித்து ஆராயுங்கள். உங்களால் அந்தப் பாடத்தைக் கற்க முடியும் என்றால், எந்தக் குழப்பமும் இன்றி, அதனை உடனே தெரிவு செய்யுங்கள்.





◆ ஒரு பாடத்தைத் தெரிவுசெய்யும்போது, அந்தப் பாடம் பற்றி அறிமுகம் மற்றும் குறைவான அறிவேனும் உங்களுக்கு இருக்கின்றதா? எனப் பாருங்கள். இல்லையென்றால், அந்தப் பாடம் சம்பந்தமான அறிமுகத்தையோ அல்லது விளக்கங்களையோ ஆசிரியர்களிடம் அல்லது பழைய மாணவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். ஏனெனில், ஒன்றைக் கற்கும் முன்னர் அதைப்பற்றி அறிந்து வைத்திருப்பது சிறந்த பலனைத் தரும்.

◆ சில மாணவர்கள் குறிப்பிட்ட பாடங்களை தாம் தெரிவுசெய்து கற்பதனால் மற்றவர்கள் தம்மைக் கெட்டிக்காரராக நினைப்பார்கள் என்ற தற்பெருமையின் காரணமாக தெரிவுசெய்கின்றனர். ஆனால், இறுதியில் இவர்கள் அந்தப் பாடங்களைக் கற்க முடியாமலும் பரீட்சையில் புள்ளிகளைப் பெற முடியாமலும் தவிக்கின்றனர். எனவே, தற்பெருமைக்காக எதையும் தெரிவுசெய்யாமல் எதிர்கால நலன் கருதி பாடங்களைத் தெரிவுசெய்வது சிறந்த பயனைத் தரும்.

◆ இன்னும் சில மாணவர்கள் தமக்குக் கடினமான பாடங்களைத் தெரிவுசெய்து பரீட்சையில் குறைந்த புள்ளிகளைப் பெறுவதற்கு அவர்களது பெற்றோரும் காரணமாகின்றனர். சில பெற்றோர்கள் ''இந்தப் பாடத்தைத் தெரிவுசெய்து படி'' என தமது பிள்ளைகளை வற்புறுத்துகின்றனர். இதனால், அவர்கள் தமது பெற்றோர் குறிப்பிட்ட அந்தப் பாடத்தை தெரிவு செய்கின்றனர். இறுதியில் சிறப்பாகக் கற்க முடியாமலும் பரீட்சையில் சிறப்பாகத் தேர்ச்சி அடைய முடியாமலும் தடுமாறுகின்றனர். தமது பிள்ளைகளின் பாடத்தெரிவில் பெற்றோர்களும் உரிய பங்களிப்புச் செய்யவேண்டும்.

◆ பிள்ளைகளின் கல்வித் தரத்தை அவதானித்து அதற்கேற்ப பாடத்தெரிவுகள் செய்வதற்கு பெற்றோர்கள் வழிகாட்ட வேண்டும் என்பதோடு, அறிவுரையும் வழங்க வேண்டும். அதேபோன்று, மாணவர்களும் தமது தற்பெருமை, சுயவிருப்பு என்பனவற்றைக் கைவிட்டு, பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து தமது கல்வித் தகைமைக்கு ஏற்ப பாடங்களைத் தெரிவுசெய்வது நன்று.

ஆகவே, மாணவர்களே! கல்விப் பயணத்தின்போது, நீங்கள் தெரிவுசெய்யும் பாடங்களே உங்களை உயர்நிலைக்கு இட்டுச் செல்கின்றது. எனவே, மாணவர்களாகிய நீங்கள் நல்ல சிந்தனையோடு, உறுதியான முறையில் பாடங்களைத் தெரிவுசெய்ய முயற்சியுங்கள்.

(தொடரும்)


எம்.ஏ.எஃப்.சப்ரானா

---

# மணம் வீசும் சாம்பிராணி



மரத்திலிருந்து பிசின் வெளிவந்த நிலையில்....



மரத்தை துளைத்தல்

**பண்டையகாலம் தொட்டு வீடுகளில் மணம் கமழ்வதற்காகவும் தொற்று நோய்கள் வராமல் தடுப்பதற்காகவும் கிருமிகளை அகற்றுவதற்காகவும் சாம்பிராணிப் புகைபிடிக்கப்பட்டு வருகின்றது**

இதன் புகை சருமநோய், சுவாச நோய்களைக் குணமாக்கவல்லது என்று கூறப்படுகின்றது. ஆனால், இன்று சந்தையின் அசல் சாம்பிராணி கிடைக்கின்றதா? என்பதில் சந்தேகம் நிலவுகின்றது. ஏனெனில், இன்று சாம்பிராணியிலும் கலப்படங்கள் செய்யப்படுகின்றன. கலப்படம் செய்யப்பட்ட சாம்பிராணி நெருப்பிலிடப்பட்டு அதன்மூலம் ஒருவகை வாசனை வருகின்றபோதிலும், அந்தப் புகையைச் சுவாசிப்பதன்மூலம் ஆஸ்துமா நோய் உள்ளவர்களுக்கு அது மேலும் தீவிரமடையும் என்று கூறப்படுகின்றது. அத்துடன், பல சுவாசக்கோளாறுகளையும் அது ஏற்படுத்திவிடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.



சாம்பிராணி



ஜாவா, சுமாத்ரா ஆகிய தீவுகளில் வளரும் 'ஸ்டைராக்ஸ் பென்சொய்ன்' (Styrax Benzoin) என்ற மரத்திலிருந்து கிடைக்கும் பிசின்தான் சாம்பிராணி எனப்படுகின்றது. இம்மரத்தைத் துளைத்தால், அதிலிருந்து வெள்ளை நிறத்திலான ஒருவகை பால் வெளிப்படும். இந்தப் பால் இறுகி பிசினாகின்றது. இந்தப் பிசின்தான் நமக்கு சாம்பிராணியாகப் பயன்படுகின்றது. இதனை நெருப்பில் இடும்போது, புகை ஏற்பட்டு அதன்மூலம் நறுமணம் உண்டாகின்றது. இது தொன்றுதொட்டு தூபப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

சாம்பிராணி மரத்திலிருந்து நறுமணம் வீசுவது குறித்து பல்வேறு கதைகள் உள்ளன. புசிக்கக் கூடாதென்று விலக்கியிருந்த கனியை புசித்து, இறைவனின் கோபத்திற்கு ஆளான ஆதிபிதா ஆதம்-ஏவாள் ஆகிய இருவரும் நிர்வாணமாகத் தூக்கியெறியப்பட்ட போது, அங்கிருந்த மரங்கள் அவர்களுக்கு மறைப்பு வழங்க மறுத்தநிலையில், சாம்பிராணி மரம் மாத்திரமே அவர்களுக்கு அனுதாபப்பட்டு மறைப்புக் கொடுத்ததாகவும் மனித இனத்திற்கு மறைப்புக் கொடுத்த நல்லெண்ணத்திற்காக, சாம்பிராணி மரத்திற்கு இறைவன் மணத்தைக் கொடுத்ததாகவும் ஒரு கதை நிலவுகின்றது. மற்றுமொரு கதையில், இறைவனின் கட்டளையை மீறிய மனிதனுக்கு அனுதாபப்பட்டமைக்காக, சாம்பிராணி மரத்தை இறைவன் நெருப்பிலிட வைத்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், வீடுகளில் மாத்திரமன்றி, சமயத்தலங்களிலும் அடக்கஸ்தலங்களிலும் சாம்பிராணி பயன்படுத்தப்படுவதை இன்றும் நாம் அவதானிக்கலாம்.

-செம்மைத்துளியான்



இறுகிய பிசின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவடையும்போது, மருந்துப் பாவனையை நிறுத்தாமல் வைத்தியரின் ஆலோசனைக்கமைய முழுமையாகப் பூர்த்தி செய்தல்.

* சிபாரிசு செய்யப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்தல்.

உடல் நிலை, நோயின் தன்மை மற்றும் நிவாரணம் என்பவற்றைக் கருத்தில்கொண்டு அவற்றை வழங்குகின்றார். அதனால், நாம் எமது விருப்பு, வெறுப்புக்கு ஏற்ப அவற்றை உட்கொள்ளும் முறையை

மருந்துகளைப் பயன்படுத்தும்போது அல்லது அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கும்போது, நோய்க்குரிய கிருமிகள் பரவலடைகின்றன. அத்தகைய சந்தர்ப்பங்களில் நோய்

# தடுப்பு மருந் முறையாகப்





நோயாளி ஒருவருக்கு குறிப்பிட்ட நோய் எதிர்ப்புக்காக, வழங்கப்படுகின்ற தடுப்பு மருந்துகளை முறையான ஒழுங்கில் பயன்படுத்தாவிட்டால், அந்நோய் முழுமையாக குணமடையாமல் நோயின் தாக்கம் மேலும் தீவிரமடையும். இந்நிலை தொடரும்போது, எவ்வித மருந்து மாத்திரைகளாலும் நோயைக் குணப்படுத்த முடியாத நிலை ஏற்படும். இதனால், நோய்க்குக் காரணமான கிருமிகளைக் கட்டுப்படுத்த முடியாதவிடத்து, நோயாளிக்கு மரணம் நேரக்கூடிய நிலைகூட ஏற்படலாம்.

1928 ஆம் ஆண்டு அலெக்சாண்டர் பிளெமிங் பென்சிலினைக் கண்டுபிடித்தார். அதற்கு முன்னர் பலரின் மரணத்திற்கு பக்றீரியாக்கள் வைரஸ்கள் மற்றும் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி வெண்குருதிச் சிறு துணிக்கைகள் அழிந்து வருதல் போன்றவை காரணமாக அமைந்தன. எனினும், நாளடைவில் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டதால் நோய்த் தொற்றுக்கள் குறைவடையலாயிற்று. அத்துடன், இந்த ஆண்டின் சர்வதேச சுகாதார தின பிரதான கருப்பொருள் 'தடுப்பு மருந்துகளை முறையாகப் பயன்படுத்துவோம்' என்பதாகும். இதன்மூலம் முறையாக மருந்துகளைப் பயன்படுத்தி உயிரைப் பாதுகாத்துக்கொள்வோம் என்ற செய்தி வழங்கப்படுவதாக அமைகின்றது

## மருந்துகளை முறையாகப் பயன்படுத்த உங்களுக்குத் தெரியுமா?

ஐரோப்பிய மருத்துவ சிகிச்சை முறையில் மாத்திரைகள், வில்லைகள், தடுப்பூசிகள் என்ற அமைப்பில் தயாரிக்கப்பட்டிருப்பதன் பிரதான நோக்கம் அவற்றை நோயாளி இலகுவாக அடையாளங்கண்டு உட்கொள்வதற்காகும். வயதின் அடிப்படையில் மருந்துகள் எடுக்க வேண்டிய நேரம், அளவு என்பன அந்தந்த மருந்து வகையின் உறையின்மேல் அல்லது பெட்டியில் அச்சிடப்பட்டிருக்கின்றது. அவற்றைப் பயன்படுத்த வேண்டிய ஒழுங்கமைப்பை நாம் விசேடமாக அறிந்து வைத்திருக்கவேண்டும். அவற்றை அறிவீனமாக அல்லது ஒழுங்கமைப்பை மீறிப் பயன்படுத்தும்போது, அவை உடல் நலத்தைப் பாதிப்பதாக அமைகின்றன.

## மருந்து வகைகளை பயன்படுத்தும்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள்

* வைத்தியரின் முறையான ஆலோசனைக்கமைய மாத்திரமே மருந்து வகைகள் உட்கொள்ளப்பட வேண்டும்.
* குறிப்பிடப்படுகின்ற மருந்து எடுக்கவேண்டிய ஒழுங்கு மாறாமல் இருத்தல்.
* நோய்க் குணம்

ஒரு நோயாளிக்கு குறிப்பிட்ட காலத்திற்கு உட்கொள்ளவென்று சிபாரிசு செய்து வழங்கப்படுகின்ற மருந்துகளை நோய் சற்றுக் குறைவடையும்போது, நிறுத்துவதால் எதிர்ப்பு சக்தி பலவீனமடைந்து நோய்க்குரிய காரணிகள் பலமடைகின்றன. இதனால், குணமடைந்த நோய் மீண்டும் வீரியத்துடன் தலைதூக்கும். இவ்வாறு மீண்டும் மீண்டும் நோய் வெளிப்படும்போது, முன்னர் பயன்படுத்திய நோய் எதிர்ப்பு சக்தியான மருந்து வகைகளாலும் நோயைக் குணப்படுத்த முடியாமல் சிரமம் ஏற்படுகின்றது.

வைத்தியர் நோய்களுக்குரிய மருந்து வகைகளை சிபாரிசு செய்யும்போது, ஒவ்வொருவரின்

மாற்றிக்கொள்ளக்கூடாது.

## தடுப்பு மருந்துகளுக்கு சாத்தியப்பாடுகள் குறைவடைவது....

நீண்ட காலமாக தடுப்பு மருந்துகளைப் பயன்படுத்தும் வழக்கத்தைக் கொண்டிருப்பவர்கள் அபிவிருத்தியடைந்த அல்லது முன்னேற்றகரமான நாடுகளைச் சேர்ந்த மக்களாவர். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இருக்கின்ற முக்கிய பிரச்சினை தரக்குறைவான நோய்த்தடுப்பு மருந்துகளும், முறையாக, கிரமமாக சிகிச்சைக்கான மருந்துகளைப் பயன்படுத்தாமையுமாகும்.

இவ்வாறு முறைகேடாக

எதிர்ப்புச் சக்தியாக மருத்துவ விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ள மருந்துகளாலும் நோய் குறைவடையாத நிலையே ஏற்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ந்துகளை பயன்படுத்துவோம்

### வைத்தியரின் ஆலோசனையின் அடிப்படையிலேயே மருந்துகளை உட்கொள்ள வேண்டும்

சாதாரண நோய் அறிகுறிகளான உடம்பு வலி, காய்ச்சல் போன்ற நிலையில் இருந்து நிவாரணம் பெற நாம் வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளாது பெனடோல் வில்லைகளை அருந்தும் வழக்கத்தைக் கொண்டுள்ளோம். எனினும், நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய ஒரு விடயம் இருக்கின்றது. எமது உடல், எடை, வயது என்பவற்றுக்கு ஏற்ப மருந்துகளை உட்கொள்வதே முக்கியமான விடயமாகும். அவ்வாறில்லாதவிடத்து, நாம் உட்கொள்ளும் மருந்து வகைமூலம் உடலுக்கு ஒத்துவராத நிலை ஏற்படலாம்.



### தடுப்பூசி, எதிர்ப்பு சக்தியால் ஏற்படும் தாக்கம்

முதல்முறையாக குறிப்பிட்ட ஒரு நோய்க்குத் தடுப்பு மருந்து வகைகளைப் பயன்படுத்தினால் இரண்டாவது, மூன்றாவது முறையும் அந்த எதிர்ப்பு மருந்துகளைப் பயன்படுத்தவேண்டும். அதேநேரம் முதல்தர, இரண்டாம் தர உயர் ரக மருந்துகளையே நாம் பயன்படுத்தவேண்டும். ஆனால், அவை விலை அதிகமானவையாகும். அவற்றின் தாக்கமும் துரிதமானதாகவும் உயர்வாகவும் இருக்கும். சில நாடுகளில் அதிக விலையுடைய மருந்துவகை விற்பனை செய்வது தடை செய்யப்பட்டிருக்கின்றது. ஆனாலும், சில வகையான மருந்துகளால் பிரதிபலன் இல்லாமல் இருப்பதும் இவ்வாறு தடை செய்யக் காரணமாக அமைகின்றது.

அத்துடன், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் தொற்றுநோய்த் தாக்கம் அதிகரித்துச் செல்வது முக்கிய பிரச்சினையாக இருக்கின்றது. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் நோய்த் தடுப்பு மருந்துகளுக்குத் தாக்குப்பிடிக்கும் நோய்க்கிருமிகளின் வளர்ச்சியும் பரம்பலும் மறுபுறத்தில் பிரச்சினையாக இருந்து வருகின்றது. 'ஸ்டெபிலோ கொகஸ் ஒரியங்' என்ற பக்றீரியா மூலம் மனிதனுக்கு ஏற்படும் நோய்க்கு முன்னர் பென்சிலின் தீர்வாக அமைந்தது. ஆனால், தற்போது அதற்குரிய பிரதிபலன் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. பென்சிலினுக்கு குறிப்பிட்ட இவ்வகை பக்றீரியாக்கள் பழகிவிட்டமையால் அத்தகைய நோய் குறைவடையாத நிலை ஏற்படுகின்றது. ஆகையால், அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வருடாந்தம் மில்லியன் கணக்கிலான மக்கள் இவ்வகை பக்றீரியாவால் ஏற்படும் நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர். இதற்கமைய, பென்சிலினுக்கு பக்றீரியாக்கள் இசைவாக்கம் அடைந்து அழியாத நிலை ஏற்பட்டிருப்பது இப்போது மருத்துவத்துறைக்கு ஏற்பட்டுள்ள பிரதான சவாலாகும்.

இவைகளை குறிப்பிட்ட ஒழுங்கமைப்புக்கு ஏற்ப பயன்படுத்தாவிட்டால், ஆபத்தை எதிர்கொள்ள நேரிடும். கர்ப்பிணித் தாய்மார், வயோதிபர்கள், பாலூட்டும் தாய்மார் சில நோய்களுக்கு முகம் கொடுத்துக்கொண்டிருப்பவர்கள் இந்த மருந்துகளையும் வைத்தியரின் ஆலோசனையினூடாக உட்கொள்வதே சிறந்ததாகும். சில வகையான மருந்துகளை வைத்திய ஆலோசனை இல்லாமல் மருந்துக்கடைகளில் இருந்து. பெற்றுக்கொள்வது ஆபத்தானதாக அமைவதோடு, சட்டரீதியாக இவ்வாறான விற்பனைகளும் தடை செய்யப்பட்டுள்ளது.

### குறிப்பிட்ட ஒழுங்குமுறையில் சுயமாக உட்கொள்ளக்கூடிய மருந்துவகைகள்

- பெரசிடமோல்
- இரும்புச்சத்து மாத்திரை
- கல்சியம் மாத்திரை
- ஜீவனி
- அஸ்பிரின்
- வயிற்றில் அலர்ச்சிக்குப் பயன்படுத்தும் மென்று உண்ணக் கூடிய (Anti Acid) வில்லை.
- இருமல் திரவ மருந்து
- பீனிசத்திற்கான (Antihitamine) மருந்து.

### தடுப்பு மருந்துகளை ஒழுங்கின்றி பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புக்கள்

- பண விரயம்
- நோய் குணமடையாமை.
- உடலுக்கு நன்மை பயக்கும் பக்றீரியாக்கள் அழிந்து நோய்களை ஏற்படுத்தும் பக்றீரியாக்கள் உடலில் உற்பத்தியாகி நோயை மேலும் உக்கிரமடையச் செய்தல்.
- ஓரளவுக்கு நோய் குணமடைந்ததும் மருந்துப் பாவனையை நிறுத்தும்போது, உடலில் மறைந்து பலவீனமடைந்திருந்த நோய்க்கிருமிகள் மீண்டும் புத்துயிர் பெற்று முன்னரைவிட நோய்நிலை உக்கிரமடைவதோடு, தடுப்பு மருந்துகளையும் முறியடித்து அவை வலுவடைதல்.


உங்களுக்கு ஒரு நோய்க்கு வழங்கப்பட்ட தடுப்பு மருந்துகளை வைத்தியரின் ஆலோசனை இன்றி இன்னொருவருக்கு வழங்குவதும் ஆபத்தானதாகும். இது உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கக் கூடியதாகும். எந்தவொரு சிகிச்சைக்குரிய தடுப்பு மருந்தும் வைத்தியரின் ஆலோசனை அல்லது சிபாரிசின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.


### நோய்க்கிருமிகளின் எதிர்த்தாக்கம்

ஒருகாலப் பகுதியில் தொற்று நோய்களின் தாக்கம் அதிகரித்தமை மானிட வாழ்க்கைக்கு பாரிய அச்சுறுத்தலாகக் காணப்பட்டது. ஆனாலும், தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டமை மனித வாழ்வின் நீடிப்புக்கு ஒரு பெரும் பிரதியுபகாரமாக அமைந்தது. ஆனாலும், இன்று மக்கள் தாம் விரும்பியவாறு எதிர்ப்பு மருந்துகளை (தடுப்பு மருந்துகள்) பயன்படுத்தப் பழகிவிட்டனர். இதன் காரணமாக, நோய்களுக்கு காரணமான பக்றீரியாக்களும் அவற்றுக்கு எதிரான மருந்துகளை எதிர்கொண்டு தாக்கம் புரியும் நிலைக்கு இசைவாக்கம் அடைந்துவிட்டன.

அத்தகைய நோய்களை தடுப்பு மருந்துகளால் குணப்படுத்த முடியாத நிலை உருவாகியிருக்கின்றது. பக்றீரியாக்களின் அமைப்பில் உள்ள கலங்களில் மாற்றம் நிகழ்ந்துள்ளமையால், அவை தடுப்பு மருந்துகளை எதிர்த்துப் போராடி உடலில் பலம் பெறும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஒழுங்கற்றதும் முறையற்றதுமான நோய்த்தடுப்பு மருந்துப் பாவனையால் ஒருசில பலவீனமான நுண்ணுயிர்கள் அழிந்தாலும் சக்திமிக்க பக்றீரியாக்கள் அழிவதில்லை. அவை உடலில் மறைந்திருந்து மீண்டும் மீண்டும் தீவிரமான பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

எவ்வாறாயினும், நோய்க்கிருமிகள் மில்லியன் கணக்கான வருடங்களுக்கு முன்பிருந்தே அனைத்து வகையான எதிர்ப்பு சக்திகளையும் எதிர்கொண்டு இசைவாக்கம் அடைந்த நிலையில் ஆயுள் நீடித்தவையாக உள்ளன. இத்தகைய நோய்க்கிருமிகளையும் பக்றீரியாக்களையும் அழித்து புதுவகை நோய்களில்-இருந்து பாதுகாப்புப்பெற புதிய தடுப்புக்களும் மருந்துகளும் கண்டுபிடிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது.








அமீர் ஹுஸைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பார்படோஸ்

**அரசு:** நாடாளுமன்ற ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பு முடியாட்சி.
**சுதந்திரம்:** ஐக்கிய ராச்சியத்திடம் இருந்து-30 நொவெம்பர் 1966.
**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினமாகிய, நொவெம்பர் 30.
**ஆட்சி மேலாண்மை** (1952): இரண்டாம் எலிஸபெத் மகாராணி.
**ஆளுநர்** (1996): சேர் கிளிஃபர்ட் ஹஸ்பேன்ட்ஸ்.
**பிரதமர்** (2010): ஃப்ரண்டல் ஸ்டுவர்ட்.





**நிலப்பிரிவுகள்:** 14 பங்குகள்.
**நாணயம்:** பார்படோஸ் டொலர்.
**மொழி:** ஆங்கிலம்.
**இனக்குழுவினர்கள்:** கறுப்பர் 90%, வெள்ளையர் 4%, ஆசிய மக்களும் கலப்பின மக்களும் 6%.
**சமயங்கள்:** புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் 67%, ரோமன் கத்தோலிக்கம் 4%, மதமற்றோர் 17%, ஏனையவை 12%.
**எழுத்தறிவு** (2002): 99.7%.
**இணையத்தளக் குறியீடு:** bb
**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** +1 (Spec.+1-246)
**தேசிய கீதம்**

In plenty and in time of need
When this fair land µwas young
Our brave forefathers sowed the seed
From which our pride was sprung…என ஆரம்பிக்கின்றது.

## புவியியல்

பார்படோஸ், பவளப்பாறைகள் இறுகி உருவான பாறைகளின் மேல் அமைந்த ஒரு நாடாகும். கரீபியன் கடலின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள இந்நாடு, டிரினிடாட்டிலிருந்து வடகிழக்கே 300 கி.மீ.தொலைவிலும் வெனிசுவெலாவுக்கு வடக்கே 483 கி.மீ. தொலைவில் அட்லாண்டிக் சமுத்திரத்தில் அமைந்துள்ளது. ஒடுங்கிய-நீளமான கரையோரத்தையும் கரையோரச் சமவெளிகளையும் கொண்டது. குறைந்த மலைகளைக் கொண்ட சமமான தரைத்தோற்றத்தை உடையது. தீவின் மேற்கு அரைப் பகுதி நிலமானது, கரையோரத் தாழ்நிலத்திலிருந்து படிப்படியாக உயர்ந்து செல்கின்றது. வடக்கிலும் மத்திய பிரதேசத்திலும் உள்ள மலைகளில் இருந்து சில சிறிய ஆறுகள் ஊற்றெடுத்து ஓடுகின்றன.

**மொத்தப்பரப்பு:** 166 ச.மைல் (431 ச.கி.மீற்றர்).
**நிலப்பரப்பு:** 166 ச.மைல் (431 ச.கி.மீற்றர்).
**மக்கள் தொகை** (2010): 285,653.
**தலைநகரமும் பெரிய நகரமும்** (2003): பிரிஜ்டவுன்.
**உயர் மலைச்சிகரம்:** மவுன்ட் ஹிலேபி- (336 மீற்).
**தாழ்மையம்:** கரீபியன் கடல்.





தேசிய இலச்சினை



பார்படோஸ் நாடாளுமன்றக் கட்டடம்



பார்படோஸ் நூதனசாலை



ஆளுநர்



ச்சேமார்லெய்ன் பாலம் (பிரிஜ்டவுன்)



பிரதமர்

## வரலாறு

பார்படோஸ் நாட்டின் பூர்வீகக் குடிகள் அராவக் இந்தியர்களாவர். ஐரோப்பியர்களால் பார்படோஸ் கண்டுபிடிக்கப்பட்டபின், அங்கு குடியேற்றங்கள் ஆரம்பமாகின. இத்தீவில் முதலில் காலடி வைத்தவர்கள் போர்த்துக்கேயர்கள் ஆவர். ஆனால், 1627 இல் முதன் முதலாக பிரித்தானியர் தமது குடியேற்றத்தை இங்கு நிறுவினர். அதனை அடுத்து இங்கு முதன் முதலாக புகையிலையும் பருத்தியும் பயிரிடப்பட்டன. 1640 இல் கரும்புப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டதோடு, இதற்காக ஆபிரிக்காவில் இருந்து அடிமைகள் இங்கு கொண்டுவரப்பட்டனர். அதனால், இன்று இங்குள்ள மக்கள் தொகையில் 90% ஆனோர் கறுப்பினத்தவர்களாக உள்ளனர். 1834 இல் பிரித்தானிய மன்னரால் அடிமை வியாபாரம் ஒழிக்கப்பட்டது.

1885 இல் பார்படோஸ் ஒரு தனி குடியேற்றமாகும்வரை மேற்கிந்திய தீவுகளுக்கான தலைமை நிர்வாக மையமாகத் திகழ்ந்தது. 1958 முதல் 1962 வரை மேற்கிந்திய கூட்டமைப்பில் ஓர் அங்கமாகத் திகழ்ந்தது. 1966 நொவெம்பர் 30 ஆம் திகதி பிரித்தானியா சுதந்திரம் வழங்கியது. அதன் பின் பொதுநலவாயத்தில் அங்கம் வகித்ததோடு, நாடாளுமன்ற ஜனநாயக முறை ஆட்சிக்குள் பிரவேசித்தது.



தலைநகரின் ஒரு பகுதி



ஹெரிசன் குகை



ப்ரிஜ்டவுன் துறைமுகம்

## காலநிலை

வெப்ப வலயத்திற்கு உட்பட்ட பார்படோஸின் மழைக்காலம் ஜூன் முதல் நொவெம்பர் வரையாகும். உலர்ந்த-வறட்சியான காலம் டிசம்பர் முதல் மே வரை நிலவும். வடகீழ் வியாபாரக் காற்றுடன்கூடிய இதமான காலநிலையைக்கொண்ட பார்படோஸின் வெப்பச் சராசரி 24 முதல் 28°c இற்கு இடைப்பட்டதாகும்.நாட்டின் கிழக்குக் கரையோரப் பிரதேசம் மழைப் பருவத்தில் கடுமையான புயல் காற்றிற்கு முகம் கொடுப்பது வழமை.

## கலாசாரம்

பார்படோஸ் கலாசாரமானது, மேற்கு ஆபிரிக்க மற்றும் பிரித்தானிய கலாசாரங்களை ஒன்றிணைந்ததாகக் காணப்படுகின்றது. பேஜான் அல்லது பார்பேடியன் பேச்சு வழக்கும் அதன் பண்பாடுகளும் கலாசாரத்தில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. எனினும், ஆங்கிலம் உத்தியோகபூர்வ மொழியாகத் திகழ்கின்றது.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2004): செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்: 2,00,100. பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 1,35,700. **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (2004): AM 2, FM 6. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்:** 1. 2 கேபள் அலைவரிசைகளும் உள்ளன) **இணையத்தள வழங்குனர்கள்** (2005): 241; இணையத்தள பாவனையாளர்கள்: 1, 50, 000.

## போக்குவரத்து

**பெருந்தெருக்கள்:** மொத்தம் 1,600 கி.மீற்றர். **துறைமுகம்:** பிரிஜ்டவுன். **விமான நிலையம்** (2005): 1.



பார்படோஸ் கொன்கோர்ட் எக்ஸ்பீரியன்ஸ்

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 37.21%): கரும்பு, காய்கறிகள், பருத்தி.
**கைத்தொழில்கள்:** சுற்றுலா, சீனி, மென் உற்பத்திப்பொருட்கள்.
**இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், மீன், இயற்கை வாயு.
**ஏற்றுமதிகள்** (2006): சீனி, ஏனைய உணவு வகைகளும் பானங்களும்.
**இறக்குமதிகள்** (2006): நுகர்வுப் பொருட்கள், இயந்திரங்கள், உணவுப்பொருட்கள், கட்டடப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், இலத்திரனியல் உபகரணங்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): ஐக்கிய ராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, டிரினிடாட் மற்றும் டுபேக்கோ, சென்.லூசியா, ஜமைக்கா, புனித வின்சன்ட் மற்றும் கிரெண்டின்ஸ், ஜப்பான்.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

- ஜோர்ஜ் வொஷிங்டன் மாளிகை
- பார்படோஸ் நூதனசாலை
- ஓர்கிட் உலகம்
- பார்படோஸ் கொன்கோர்ட் எக்ஸ்பீரியன்ஸ்
- ஹெரிசன் குகை
- ஃபார்லி ஹில் தேசிய பூங்கா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சுவரொட்டிகள் பற்றிய வரலாறு

வீதிகளின் இரு மருங்கிலும் உள்ள சுவர்களுக்கு வண்ணப்பூச்சு பூசுகிறார்களோ, இல்லையோ அங்கு சுவரொட்டிகள் முதன்மை பெற்று விடுகின்றன. இன்று சினிமா உலகம், அரசியலில் தேர்தல் காலம், பிரத்தியேக வகுப்புகளின் விளம்பரங்கள் மேலும், பஸ் தரிப்பிடங்களில் காணப்படும் சுவரொட்டிகள் என இவை ஒரு கலாசாரமாக, மக்களோடு பிணைந்து விட்டது.

உலகின் பலமான அரசுகள் என வரலாறுகளில் கூறப்படுகின்ற கிரேக்க மற்றும் ரோமப் பேரரசுகள் தங்களுடைய ஆட்சிக் காலத்தில் அரசாங்கத்தினது செய்திகளை மக்களுக்கு விளக்குவதற்காக, ஆங்காங்கே மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் ஒரு பலகை போன்ற தட்டத்தில் செய்தி அறிவுப்புக்களை எழுதின. அதனை மக்கள் பார்த்து அறிந்தனர். இவ்வாறே, சுவரொட்டியின் வரலாறு ஆரம்பமாகியது.








இத்தகைய சுவரொட்டிகள் காலப் போக்கில் பெரும் விளம்பரமாக மாறியதற்கு காரணமாக அமைந்தவர்கள் பிரித்தானியர்களே. இதன் அறிமுகம் 1838 இல் ஆரம்பிக்கிறது. துண்டுப் பிரசுரங்கள், அறிக்கைகள், விளம்பரங்கள் போன்றவற்றை ஒரு பலகையில் இட்டு அதனை விளம்பரப் பலகை என்றும், இதில் ஒட்டப்படுவதை போஸ்டர் என்றும் அழைத்தனர். நாளடைவில் இது ஒரு கலையாக வியாபித்தது.


இவ்வாறு வெளியிட்ட அல்லது பார்வைக்குட்படுத்திய போஸ்டரில் முதன்மையானது 1845 இல் வெளியானது. இப்போஸ்டரில் படங்களை வரைந்த ஓவியர்களாக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த போல் கவரனி, கிராண்ட் வில்லி ஆகியோர் திகழ்ந்தனர். இதனைத் தொடர்ந்து 1848 இல் 'லிதோ கிராபி' எனும் முறையில் சுமார் 10,000 க்கும் மேற்பட்ட போஸ்டர்கள் பெரியளவில் அச்சடிக்கப் பட்டன. அப்போது இதனை பல்வேறு நிறங்களில், கண்களுக்குக் கவர்ச்சியாகவும், குறித்த வாசகங்களையும் எழுதி ஆரம்பித்தமை குறிப்பிடத் தக்கது.

பெரிஸ் நகரைச் சேர்ந்த ஹென்றி டி டவ்லூஸ் லாட்ரிக் மற்றும் அல்ஃபோன்ஸ் மச்சா என்பவரும் இணைந்து 1890 இல் தயாரித்த போஸ்டர் முறைகள் தான் இன்று வரையும் பின்பற்றப் படும் போஸ்டர் முறைகளாக கருதப்படுகின்றன.

சுவரொட்டிகளின் அளவுகள், எழுத்துக்கள், படங்கள் போன்றவைகளையும் இவர்களே ஆரம்பித்துவைத்தனர். இதற்கமைவாகவே, எந்த வண்ணத்தில் அச்சடிப்பது? எந்த வாசகத்தை எப்படி எழுதுவது? போன்றவற்றையெல்லாம் வரையறுத்து சுவரொட்டிகள் வெளியிடப் பட்டன.



உலக மகா யுத்தம் 1914 இல் நிகழ இருந்த வேளைகளில் ஒரு வாசகம் சுவரொட்டிகளில் ஒட்டப் பட்டு வரலாற்றில் இடம்பிடித்தது. 'உங்கள் நாடு உங்கள் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறது' என்கிற அந்த வாசகத்தை ஆங்கிலத்தில் அச்சடித்து சுவர்களில் ஒட்டிய போது மக்கள் ஆச்சரியத்துடன் அவற்றை வாசித்தனர். இதுதான் உலகின் நவீன அரசுகளின் முதற் போஸ்டர் எனவும் கூறப்படுகின்றது.



















1884 ஆம் ஆண்டு ஒக்டோபர் 07 ஆம் திகதி உலகிலேயே மிகவும் பிரமாண்டமான போஸ்டர் ஒன்றை ஜப்பானிலுள்ள ஒஸாகா எனும் இடத்திலுள்ள காகுன் பல்கலைக் கழக மாணவர்கள் தயாரித்து வெளியிட்டனர். இப்போஸ்டரின் பரப்பளவானது, 22,000 சதுர அடிகளாகும் என வரலாற்றுப் பதிவுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

இதன் பின்னர், கிரீன்ஸ் பொரோ எனும் பாடசாலை மாணவர்களால் 43,000 சதுர அடிகள் பரப்புக் கொண்ட மாபெரும் போஸ்டர் தயாரிக்கப் பட்டது. இதேவேளை, 1902 ஆம் ஆண்டில் கொலோமென் என்பவரால் வடிவமைக்கப் பட்ட போஸ்டர் ஒன்று 1985 ஆம் ஆண்டு லண்டனில் 'வியன்னா' கண்காட்சியினை அறிவிக்கும் விளம்பரப் போஸ்டர் ஆனது. இது அவ்வாண்டு சுமார் 93000 டொலருக்கு ஏலம் போனது.




அந்தவகையில், உலகில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்ட போஸ்டரும் இதுவாகவே அமைந்தது.

எஸ்.எல்.மன்சூர்

## தெரிந்து கொள்வோம்

* பொலன்னறுவையை தலைநகராகக் கொண்ட ராச்சியம் வீழ்ச்சியடையக் காரணம் கலிங்க நாட்டு மன்னனின் ஆக்கிரமிப்பும் கொடுங்கோல் ஆட்சியுமாகும். அந்தக் கொடுங்கோல் ஆட்சிக்குக் காரணமான மன்னன் யார்?
  மாகன்
* இலங்கையின் வட முனையான பேதுறு முனையிலிருந்து, தென் முனையான தெவுந்திர முனைக்குள்ள தூரம் எவ்வளவு?
  432 கி.மீ (270 மைல்)



* பாம்புக்கு காது கேட்குமா? அது எவ்வாறு ஒலியை உணருகின்றது?
  பாம்புக்கு காதில்லை, அது அதிர்வுகளால் ஒலியை உணருகின்றது



* பென்சிலினைக் கண்டுபிடித்தவர் யார்?
  அலெக்சொண்டர் பிளெமிங்
* ஒட்டகத்தை 'பாலைவனக் கப்பல்' என அழைப்பர். பாலைவனத்தில் ஒட்டகங்கள் செல்லும் பாதை எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
  கரவன் பாதை





* சூரியன் உதிக்கும் நாடு என ஜப்பானை அழைக்கின்றனர். 'அதிகாலை அமைதி நாடு' என அழைக்கப்படும் நாடு எது?
  கொரியா
* இலங்கை நாடாளுமன்றத்தின் இன்றைய சபாநாயகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் பெயர் என்ன?
  மும்தாஸ் மஹால்






* ஒரு மைல் எத்தனை கிலோ மீற்றர்?
  1.6 கிலோ மீற்றர்
* இலங்கையில் மக்கள் பிரதிநிதிகள் கூடும் இடம் நாடாளுமன்றம் என அழைக்கப்படுகின்றது. அவ்வாறே, ஜப்பானிய மக்களின் மக்கள் பிரதிநிதிகள் கூடுமிடம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
  டயட்





* இலங்கை எந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்தவராக இணைந்து கொண்டது?
  1955
* உலக சிறுவர் தினம் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் முதலாம் திகதி நினைவு கூரப்படுகின்றது. அவ்வாறே, உலக முதியோர் தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?
  ஒக்டோபர் 01




* கிஸ்தவம், இஸ்லாம், யூத மதங்கள் ஒரு குறிப்பிட்ட நகரத்தை புனித நகரமாகக் கருதுகின்றன. அது எந்த நகரம்?
  ஜெருசலேம்



* விசர் நாய் கடிக்கு மருந்து கண்டுபிடித்தவர் யார்?
  லூயி பாஸ்டர்
* ஸ்பெயின் நாட்டின் தலைநகர் எது?
  மெட்ரிட்

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வினாத்தாள் - I (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: ..................................................... நேரம்: 45 நிமிடங்கள்

★ 25 ஆம், 26 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் வரிப்படத்தை விபரிக்கும் விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(25) 


1. மாணவர்கள் - ஆசிரியர்கள்- அதிபர்கள்
2. மாணவர்கள் - மாணவி - மாணவன்
3. ஆசிரியர்கள் - இசைக்கலைஞர்கள் - விஞ்ஞானிகள் (............)

(26) 

1. மரங்கள் - தென்னை - பனை
2. தாவரங்கள் - மரங்கள் - கொடிகள்
3. மரங்கள் - பலாமரம் - குப்பைமேனி (............)

★ பின்வரும் வினாக்களுக்குரிய மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.

(27) ஒரு சதுர வடிவமான காணியைச் சுற்றி வேலி அடைப்பதற்கு ஒரு பக்கத்திற்கு 15 வேலிக்கட்டைகள் தேவை. அக்காணியைச் சுற்றி வேலி அடைப்பதற்கு எத்தனை வேலிக் கட்டைகள் தேவை?



1. 60 2. 56 3. 58

(28) மாலை 4 மணியளவில் நான் நகரில் இருந்து வீட்டிற்குத் திரும்பி வரும்போது, எனது நிழல் என்னைப் பின்தொடர்ந்து வந்ததாயின், நான் எந்த திசையை நோக்கி நடந்து கொண்டிருந்தேன்?

1. கிழக்கு 2. மேற்கு 3. வடக்கு

★ 29-31 வரையுள்ள வினாக்களிலுள்ள விடயங்களுக்கேற்ற சரியான விடையின்கீழ் கோடிடுக.

(29) 

இக்குறியீடு காட்டுவது;

1. நேரே செல்லவும் 2. முன்னால் வலப்பக்கம் திரும்பவும்
3. முன்னால் இடப்பக்கம் திரும்பவும்

(30) 

அருகிலுள்ள உருவில் வாழிடங்களை அமைத்துக்கொள்ளும் பிராணிகள்;

1. எறும்பு - கறையான் - அணில்
2. பாம்பு - கறையான் - முதலை
3. கறையான் - பாம்பு - எறும்பு

(31) 

இவ்வுரு காட்டும் கைச்சைகை;

1. வாகனங்களை நிறுத்துக 2. முன்னோக்கிச் செல்க
3. முன்னாலும் பின்னாலும் வாகனங்களை நிறுத்துக

★ மிகவும் சரியான விடையின்கீழ்க் கோடிடுக.

(32) மைனாவின் (நாகணவாய்) முட்டையின் நிறம்;

1. பச்சை 2. வெள்ளை 3. நீலம்

(33) பண்டைய காலத்தில் தங்கத்தின் நிறையை அளவிடப் பயன்படுத்திய தாவர வித்து எது?

1. குன்றிமணி வித்து 2. மஞ்சாடி வித்து 3. ஆமணக்கு வித்து

(34) பாடசாலை வைபவம் ஒன்றின்போது, மாணவர்கள் இலகுவாக நிற்கும் கொண்ணிலையைக் காட்டும் உருப்படம் எது?

1.  2.  3. 




(35) இலங்கையின் அரச இலச்சினையில் காணப்படுபவை;

1. தர்ம சக்கரம் - சூரிய சந்திரன் - நீல அல்லி - நிறை கலசம் - மலரிதழ் - நெற்கதிர்
2. தர்ம சக்கரம் - சூரிய சந்திரன் - சிங்கம் - நிறை கலசம் - மலரிதழ்- நெற்கதிர்
3. நாகமரம் - சூரிய சந்திரன் - சிங்கம்-நிறை கலசம் - மலரிதழ் - நெற்கதிர்

(36) "நம்பிக்கை எதனையும் துணிந்து செய்கிறது; அன்பு எதையும் பொறுத்துக்கொள்கிறது" இப்பழமொழி எந்த நாட்டிற்குரியது?

1. சீனா 2. அமெரிக்கா 3. அரபு நாடு

(37) வியாபாரி ஒருவர் பொருள் ஒன்றை நிறுத்தபோது, படித்தட்டில் $1\frac{1}{2}$ கிலோகிராம் படிகளை வைத்து பொருளுடன் 100 கிராம் படியையும் வைத்தார். பொருளின் நிறை யாது?

1. 1400g 2. 1300g 3. 1500g

★ 38 ஆம், 39 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து, அவற்றிற்குரிய இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(38) புதிய சன்லைட் கட்டியின் நிறை யாது?

1. 130g 2. 140g 3. 80g (..........)

(39) 2005 ஆம் ஆண்டு மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயக்குற்றிகளில் 25 சதம் உருவாக்கப்பட்ட உலோகம்;

1. பித்தளை முலாமிடப்பட்ட உருக்கு 2. நிக்கல் முலாமிடப்பட்ட உருக்கு
3. செப்பு முலாமிடப்பட்ட உருக்கு (..........)

★ பின்வரும் ஒவ்வொரு புதிருக்கும் சரியான விடையைக் கண்டுபிடித்து அதனை புள்ளிக்கோட்டில் எழுதுக.

(40) ஆறு எழுத்துள்ள ஒரு உலோகப் பெயர். அதன் இறுதி மூன்று எழுத்துகள் சேர்ந்தால் அது ஒரு கொடிய பிராணி. அவ்வுலோகம் எது? (....................)

(41) கதிர் ஒளி தொடாத கங்கை. கறந்த பாலில் இல்லாத வெள்ளை. களிமண்ணாற் செய்யாத பாண்டம். காற்று நுழையாத வீடு அது என்ன? (....................)

### வினாத்தாள் - I இற்கான விடைகள்

*(ஜூலை 20, 27 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (01) 1 | (02) 2 | (03) 2 | (04) 1 | (05) 2 | (06) 3 |
| (07) 3 | (08) 2 | (09) 3 | (10) 2 | (11) 3 | (12) 3 |
| (13) 3 | (14) 1 | (15) 2 | (16) 2 | (17) 2 | (18) 1 |
| (19) 2 | (20) 1 | (21) 3 | (22) 3 | (23) 3 | (24) 2 |
| (25) 2 | (26) 3 | (27) 2 | (28) 2 | (29) 2 | (30) 3 |
| (31) 1 | (32) 3 | (33) 2 | (34) 2 | (35) 2 | (36) 2 |
| (37) 1 | (38) 2 | (39) 3 | (40) துத்த நாகம் | (41) தேங்காய் | |

## பிரபலங்கள் மொழிந்தவை






- நேர்மையான உழைப்பில்தான் கௌரவம் இருக்கிறது- **க்ரோவர் கிளீவ்லண்ட்.**
- ஆடம்பரம் அதிகரிக்க, அதிகரிக்க ஒழுக்கம் குறைய வாய்ப்புண்டு - **ஜே.ஜேக்ஸ் ரூசோ.**
- தெய்வ நம்பிக்கைக்கு அடுத்து உழைப்பில் நம்பிக்கை வைக்க வேண்டும் - **ஓஷோ.**
- சோம்பேறிகளின் நாக்கு சோம்பேறியாக இருப்பதில்லை - **தோமஸ் ஃபுல்லர்.**
- நம்பிக்கையே வாழ்க்கையின் சக்தி; கவலை வாழ்க்கையின் எதிரி - **ஷேக்ஸ்பியர்.**
- பிறரைச் சீர்திருத்துவதைவிட, தன்னைச் சீர்திருத்துவதே முதற்கடமை - **பேர்னாட் ஷா.**
- எறும்பைப்போல உபதேசிப்பவர் யாருமிலர்; ஆனால், எறும்போ பேசுவதே இல்லை - **ஃபிராங்க்ளின்.**

## ஷ்... உங்களுக்கு மட்டும்!






★ கடல்நீரைக் குடித்து வாழும் பறவை - அல்பட்ரஸ்.
★ சிலந்திக்குப் பசி வந்தால் இன்னொரு சிலந்தியை உணவாகக்கொள்ளும்.
★ உப்பை உணவாகக்கொள்ளும் உயிரினம் - முள்ளம்பன்றி.
★ ஒருமுறை குடிக்கும் நீரை பல நாட்களுக்கு வைத்துக்கொள்ளும் உயிரினம் - ஒட்டகம்.

## நீங்கள் யார்?

★ முதல் முயற்சியில் வெற்றி பெறுபவர் - அதிர்ஷ்டசாலி.
★ இரண்டாம் முயற்சியில் வெற்றி பெறுபவர் - புத்திசாலி.
★ மூன்றாம் முயற்சியில் வெற்றி பெறுபவர் - தைரியசாலி.
★ நான்காம் முயற்சியில் வெற்றி பெறுபவர் - அனுபவசாலி.
★ வெற்றி பெறும்வரை முயற்சி செய்பவர் - சாதனையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று இருதயங்களைக் கொண்டுள்ள ‘கணவாய்’



Cuttle Fish என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் கணவாய்களை 'மெல்லுடலிகள்' என்றும் அழைப்பர். இவை கடலில் மட்டும் வாழ்பவை. சூழ்நிலைக்கு ஏற்ப தம்முடலின் நிறத்தை அடிக்கடி மாற்றிக்கொள்ளும் இயல்பைக் கொண்டுள்ளன. கணவாய்கள் பல பிறப்புக்குணாதிசயங்களைக் கொண்டு காணப்படுகின்றன. அதன் உடலைச் சுற்றி மென்ட்ல் (Mantle) உறையுள்ளது. முன்புறத்தில் தலையும், அதைச் சுற்றி எட்டுக்கைகளும் வாலில் இரண்டு நீண்ட துடுப்புகளும் உள்ளன. இதன் தோற்றம் ஒக்டோபஸ் போன்று காணப்படும். கைகள் ஏனைய பிராணிகளின் மேல் ஒட்டிக்கொள்ளவும், உணவை பற்றிப் பிடிப்பதற்கும் உதவுகின்றன. இவை ஆபத்துக்களைச் சந்திக்கும் பொழுது, கறுப்பு நிறத் திரவம் ஒன்றை நீரில் சுரந்து, நீரைக் கறுப்பு நிறத்தில் மாற்றி அதனைக் கலக்கி குழப்பியடித்து எதிரியிடமிருந்து தப்பித்துக்கொள்கின்றன. இவை வசந்த காலத்திலும், கோடை காலத்திலும் இனப்பெருக்கம் செய்கின்றன.


கணவாய்களின் திறப்பில்லாத இரத்தக் குழாய்களின் வழியாக (Closed Circulatory System) இரத்தம் உடல் முழுவதும் சென்று மறுபடியும் இருதயத்திற்கே திரும்பி வருகின்றது. இவற்றிற்கு சுருங்கி விரியும் நுரையீரல்களும்,





இருதயங்களும் உள்ளன. இவற்றின் செயல்களால் இரத்த அழுத்தம் அதிகரிப்பதுடன், இரத்த ஓட்டமும் துரிதப்படுத்தப்படுகிறது. கணவாய்களுக்கு மூன்று தனித்தனி இருதயங்கள் உள்ளன. இவற்றில் இரண்டு இருதயங்கள் சுவாச உறுப்புகளுக்கு அடியில் பிராங்கியல் இருதயங்களாகச் செயற்படுகின்றன. இவை சுருங்கி விரிவடைவதால் உடலின் பல பகுதிகளில் இருந்து வரும் அசுத்த இரத்தத்தைச் சேர்த்து அதைச் சுவாச உறுப்புகளினுள் அனுப்புகின்றன.

இரத்தம் சுவாச உறுப்புகளில் வாயு மாற்றத்தைப் பெறுகின்றது. இரத்தம் சுத்தமடைந்த பின்னர், மூன்றாவது இருதயத்திற்கு (நடு இருதயத்திற்கு) வந்தடைகின்றது.




மூன்றாவது இருதயம் பல அறைகளைக் கொண்டுள்ளது. இது இரத்தத்தை உடலில் உள்ள பல்வேறு உறுப்புகளுக்கு அனுப்புகின்றது. பொதுவாக கணவாய்களின் இரத்தம் நீல நிறமாகவே காணப்படும். ஏனைய பிராணிகளின் இரத்தம் சிவப்பு நிறமாக இருப்பதற்குரிய காரணம், அவற்றின் இரத்தத்தில் இரும்பு அயனிகளைக் கொண்டுள்ள ஹீமோகுளோபின் நிறமித்துகள்கள் அடங்கி இருப்பதேயாகும். ஆனால், கணவாய்களின் இரத்தத்தில் செம்பு அயனிகளைக் கொண்டுள்ள ஹீமோசையனின் நிறமித்துகள் உள்ளன. இதனால்,இவற்றின் இரத்தம் நீல நிறமாக உள்ளது.(அ)





## விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 4219
வி.அகிலா, சொய்சாகலை, நாவலப்பிட்டி.


அங்.இல: 4220
அய்யாஷ் சல்மான், கிரேண்ட்பாஸ் வீதி, கொழும்பு-14.


அங்.இல: 4221
ஜே.சம்ரா, ஹிந்தகொல்ல, ஹொரம்பாவ.


அங்.இல: 4222
ஆர்.விமல்ராஜ், கோர்கஸ் வோல்ட் கீ.பி. பொகவந்தலாவ.


அங்.இல: 4223
எம்.நஸ்லான், பானகமுவ, குருநாகலை.


அங்.இல: 4224
எஸ்.பஸால், மதவாக்குளம், ஆண்டிகம.


அங்.இல: 4225
எஃப்.றயிசா, மார்க்கட் வீதி, சாய்ந்தமருது-07


அங்.இல: 4226
ர.பிஜந்தினி, விவேகானந்த நகர், கிளிநொச்சி.


அங்.இல: 4227
வி.வசந்த், சொய்சாகலை, நாவலப்பிட்டி.


அங்.இல: 4228
ம.லேனுகா, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

## சாதனையாளர்: (அணு ஆராய்ச்சித்துறை)

## நீல்ஸ் ஹென்றி டேவிட் போர்


(1885-1962)

அணு ஆய்வுத்துறையில் வியப்பூட்டும் பல சாதனைகளுக்கு உரிமையாளரான நீல்ஸ்போர் டென்மார்க் நாட்டைச் சேர்ந்தவர். அந்நாட்டின் தலைநகரான கோபன்ஹேகனில் 1885 இல் பிறந்த நீல்ஸ்போர் இளமையில் மிக ஆர்வத்துடன் கல்விபயின்றார். கல்லூரியில் கற்கும் போதே, பௌதீக உண்மைகளை ஆய்வுசெய்து வெளிப்படுத்தியதன் மூலம் 'தத்துவ ஆராய்ச்சி வல்லுனர்' என்ற பட்டத்தைப் பெற்றார். அணுக்கள் பற்றிய சில உண்மைகளைக் கண்டுபிடித்தமையால் கோபன்ஹேகன் விஞ்ஞான சங்கம் இவருக்கு தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவித்தது. அதன்பின், உலோகப் பொருட்களின் எலக்ட்ரோன் கொள்கைபற்றி ஆராய்ந்து கலாநிதி பட்டமும் பெற்றார்.

ரேடியம், யுரேனியம் முதலிய கதிரியக்கப் பொருட்களில் ஒளி உண்டாகும் தன்மையை உலகறியச் செய்தார். இந்த ஆராய்ச்சிக்காக, இவர் 1922 இல் நொபெல் பரிசு பெற்றார். ஹாப்னியம் என்ற ஒரு புதிய மூலகத்தை நீல்ஸ்போர் 1923 இல் கண்டுபிடித்தார். நீல்ஸ்போரின் இத்தகைய ஆய்வுத்திறனை அறிந்து ராக்பெல்லர் சர்வதேச கல்விக்கழகம் 1924 ஆம் ஆண்டு நாற்பதாயிரம் அமெரிக்க டொலர்களைப் பரிசாக வழங்கிக் கௌரவித்தது. தனக்குப் பரிசாகக் கிடைத்த பெருந்தொகைப் பணத்தை விஞ்ஞானக் கருவிகள் வாங்குவதற்கே அவர் செலவழித்தார்.

1926 இல் இங்கிலாந்தின் தலைசிறந்த விஞ்ஞானக் கழகமான அரசினர் கழகத்தின் உறுப்பினராக நீல்ஸ்போர் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அதன்பின்னர், அமெரிக்காவின் நியூமெக்ஸிகோ மாகாணத்தில் உள்ள லொஸ்ஏஞ்சல்ஸ் எனுமிடத்தில் நீல்ஸ் போரின் உதவியால் உருவாக்கப்பட்ட அணுகுண்டை 1945 இல் அமெரிக்கா இரண்டாம் உலகப் போரின்போது, தனது பகைவர்களைப் பணியவைக்கப் பயன்படுத்தியது. அதனால், ஏற்பட்ட அழிவுகளைக்கண்டு மனமுடைந்த அவர் அணுகுண்டின் அழிவுகளைத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்காக பிறருக்கு அதன் பாதிப்புகளை எடுத்துரைத்தார்.

1950 இல் கொரியாப் போர் ஏற்பட்ட வேளையில் அமைதிப் பணிபுரிந்தார். 20 ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த விஞ்ஞானியாகவும் உலகின் உயர்ந்த சிந்தனையாளர்களில் ஒருவராகவும் திகழ்ந்த நீல்ஸ்போர் தத்துவ அணுசக்தி நிறுவனத்தை ஏற்படுத்தினார். அத்தோடு, ஐரோப்பிய அணுசக்தி ஆய்வகத்தை உருவாக்க அரும்பாடுபட்டார். அணுசக்தி ஆய்வில் சிறப்பிடத்தைப் பெற்ற நீல்ஸ்போர் அவர்கள் 1962 இல் மறைந்தார்.

ஆர்.ஜே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இமயமலைப் பகுதி

1938 ஆம் ஆண்டு சீன புதைபொருள் ஆய்வாளர் பேராசிரியர் ச்சீ பூ தெய், சில மாணவர்களுடன் விசேட ஆய்வுப் பயணம் ஒன்றில் ஈடுபட்டிருந்தார். இமயமலைப் பிரதேசத்திலேயே அந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வினை ஆரம்பித்தபோது, அங்கு ஒரு வியப்பான கண்டுபிடிப்பொன்று நிகழப்போகின்றது என்பதனை அவர்களில் ஒருவரேனும் அறிந்திருக்கவில்லை. அந்தக் கண்டுபிடிப்பானது விஞ்ஞானத்திற்கே ஒரு சவாலாக இருந்தது. பறக்கும் தட்டுக்கள், வேற்றுக்கிரக வாசிகள் பற்றிய தர்க்கங்களுக்கு மத்தியில் இந்த கண்டுபிடிப்பு பற்றியும் அதிகம் பேசப்படலாயின. இதனை 'ட்ரோபா மர்மம்' (Mysterious Dropa) என்று குறிப்பிடுகின்றனர்

## குகைகள் பற்றிய ஆய்வு

புதைபொருள் ஆய்வுக்காக, இமய மலைப்பகுதிக்கு சென்றிருந்த பேராசிரியர் ச்சி பூ தெய் மற்றும் அவரது மாணவர்கள் அடங்கிய ஆய்வுக்குழுவின் நோக்கம், அப்பகுதிகளில் இருக்கும் பிரசித்தி பெற்ற குகைகளை ஆய்வு செய்வதாகும். இந்தக் குகைகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. இக் குகைகள் 'பயன்கார-உலா' (Bayankara - Ula) என்ற மலைத் தொடரிலேயே அமைந்துள்ளன. தற்போதளவில் இந்தக் குகைகள் மிகவும் பிரசித்தி பெற்றுள்ளபோதும், அன்று இதைப் பற்றி எவரும் அறிந்திருக்கவில்லை. புதைபொருள் ஆய்வாளர்கள் மட்டுமே இந்தக் குகைகள் மீது அதீத அக்கறை செலுத்தி வந்தனர். இந்த இருண்ட மர்மக்குகைகளுக்குள் செல்லும்போது, அந்தக் குகைகளின் அழகினைக் கண்டு ஆய்வுக்குழுவினர் வியந்தனர். இயற்கையின் அழகிய கொடையாகவே அவர்கள் இந்தக் குகைகளைக் கருதினர்.

## வியப்பான கண்டுபிடிப்பு

அந்த அழகினை ரசித்துக்கொண்டு ஆய்வுக்குழுவினர் மெல்ல மெல்ல குகைகளுக்குள் செல்லும்போது, எதிர்பாராமல் ஒரு கல்லறை ஒன்றை அவர்கள் கண்டனர். அதனை உற்று நோக்கியபோது ,அங்கு அவ்வாறான கல்லறைகள் பல இருப்பதனை அவர்கள் கண்டனர். இக்கல்லறைகள் ஒரே வரிசைக்கிரமமாக நேராக நிற்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன. இதனைக் கண்ட ஆய்வுக்குழுவினர் வியப்புற்றனர்.

## கல்லறைகள் ஆய்வு

இக்கல்லறைகளை ஆய்வுசெய்த போது, அவற்றில் சடலங்கள் இருப்பதனை அவர்கள் கண்டனர். இச்சடலங்களின் எலும்புகள் மட்டுமே அதில் இருந்தன. அனைத்து கல்லறைகளிலுமே மனித எலும்புகளே காணப்படுவதாக நம்பப்பட்டது. ஆனால், அவற்றை நன்கு ஆய்வுசெய்து பார்த்தபோது, இந்த எலும்புகள் சாதாரண மனிதர்களுடையதல்ல என்பது புரிந்தது. சாதாரண மனிதர்களின் எலும்புக்கூட்டிலிருந்து மாறுபட்டதாக அவை அமைந்திருந்தன. அவற்றின் மண்டை ஓடுகள், மனிதர்களின் மண்டை ஓடுகளைவிடப் பெரிதாக இருந்தன. எனினும், உடல் பாகத்திற்குரிய எலும்புகள் சிறியதாக இருந்ததை அவர்கள் கண்டனர். பாதங்களினதும் கைகளினதும் எலும்புகள் மெல்லியதாக இருந்தன. இந்த எலும்புகள் இமயமலைப்பகுதிகளில் வசித்த வேறு இன மனிதர்களின் எலும்புகள் என்று ஆய்வுக் குழுவினர் அப்பொழுது கருதினர்.

## 'ட்ரோபா' பாறைத் தட்டுக்கள்

ஆய்வுக்குழுவினர் அங்கு தொடர்ச்சியாக ஆய்வுகளை மேற்கொண்ட போது, அங்கு சற்றுப் பெரிய அளவிலான வட்டமான பாறைத்தட்டொன்றை ஆய்வுக் குழு மாணவர் ஒருவர் கண்டெடுத்தார். ஏனைய மாணவர்களாலும் இத்தகைய பாறைத் தட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டன. முதலில் கண்டெடுக்கப்பட்ட பாறைத் தட்டின் சுற்றளவு ஒன்பது அங்குலம். அது ஒரு அங்குலம் தடிப்பானது. பாறைத் தட்டின் மையப்பகுதியில் ஒரு அங்குலம் விட்டம்கொண்ட துளையொன்று இடப்பட்டிருந்தது. இத்தட்டின்மீது உருவங்கள் வரையப்பட்டிருந்தன. இவை தொடர்பாடலுக்குப் பயன்படுத்தப்பட்ட பழமையான அடையாளங்களாகும்.


குகை ஒன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்ட சடலம் ஒன்று

## எழுத்து வடிவங்கள்

இந்த எழுத்து வடிவங்களை தெரிந்துகொள்ள குறித்த ஆய்வுக்குழுவினர் உட்பட, பேராசிரியர்கள், துறைசார் அறிஞர்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் முயற்சித்தனர்.எனினும், அந்த முயற்சி கைகூடவில்லை. ஆக, இந்த விடயம் தொடர்பான மர்மம் துலங்க இரு தசாப்தங்கள் தேவைப்பட்டன. அதன்படி, இந்த எழுத்துவடிவங்கள் 1962 இல் சீன விஞ்ஞானி ஒருவரினால் மொழிபெயர்க்கப்பட்டன. இந்த விஞ்ஞானியின் பெயர் சும் நும் நூய் என்பதாகும். இவர் பாறைத் தகடுகளின் வரலாற்றினை விளங்கிக்கொண்ட போதும், அதிலிருந்த எழுத்து வடிவங்களை விளங்கிக்கொள்ளப் பெரிதும் சிரமப்பட்டார். இது அவருக்கு பெரும் சவாலாக இருந்தது. இதற்குக் காரணம் இந்த எழுத்து வடிவங்கள் எப்பொழுதுமே அறியப்படாததாக இருந்தமையாகும். அத்துடன், இந்த வடிவங்கள் மிகச்சிறியவையாகவும் இருந்தன. மேலும் இந்த எழுத்துக்களை அறிந்துகொள்ள விசேட உபகரணங்களும் தேவைப்பட்டன.

## வியக்கவைத்த கதை


கலாநிதி சும் நும் நூய் 'ட்ரோபா' பாறைத் தகடுகளை ஆய்வுசெய்ததில், அந்தப் பாறைத் தட்டுக்கள் 12 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தவை என்று அறியக்கிடைத்தது. அத்துடன், அவற்றில் எழுதப்பட்டிருந்த செய்திகளை வாசித்து அவர் வியப்பில் ஆழ்ந்தார். இந்த எழுத்து வடிவங்கள் வானியல் சம்பந்தமான கதையொன்றை வெளிப்படுத்துவதாக இருப்பதை அவர் தெளிவுபடுத்தினார். அதன்படி, விண்வெளியில் இருந்து வந்த வேற்றுக்கிரக ஆய்வு விமானம் ஒன்று பற்றியே அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த விமானம் விபத்துக்குள்ளாகி இமயமலையின் பயன்கார - உலா பகுதியில் விழுந்துள்ளது.

பாறைத் தகடுகளில் உள்ள தகவல்களின்படி, இந்த விமானத்தில் இருந்தவர்கள் அமைதியானவர்களாக இருந்துள்ளதோடு, அவர்கள் 'ட்ரோபாக்கள்' என அழைக்கப்பட்டனர். ஆனால்,


பாறைத் தகடுகள் தகடுகளில் உள்ள எழுத்து வடிவங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...யின் 'ட்ரோபா மர்மம்'





'ட்ரோபா' பழங்குடியினர்

அந்தக் காலத்தில் அப்பகுதியில் வாழ்ந்து வந்த 'ஹன்' எனும் பழங்குடி மக்களால் அவர்களைபுரிந்துகொள்ள முடியவில்லை. 'ஹன்' பழங்குடி மக்கள் இந்த ட்ரோபா வேற்றுக்கிரகவாசிகளை எதிரிகள் என்று கருதியுள்ளனர். இதன் காரணமாக, இப்பழங்குடி மக்கள் ஒரு சில வேற்றுக்கிரகவாசிகளை கொலை செய்துள்ளனர். அதனையடுத்து, தாம் எதிரிகள் அல்லர் என்பதை வேற்றுக்கிரகத்தினர் 'ஹன்' பழங்குடியினருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். இதனை காலப்போக்கில் அப்பழங்குடியினரும் உணர்ந்துகொண்டனர்.

இதன்பின்னர், இந்த வேற்றுக்கிரகவாசிகள் உடைந்து விழுந்த தமது விமானத்தினை சரிப்படுத்திக்கொண்டு தமது தாயகம் செல்ல எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ளன. அளவில் குள்ளமான இவர்கள், பின்னர் 'ஹன்' பழங்குடியினருடன் இணைந்து வாழ்ந்துள்ளனர். அவர்களுடன் திருமணம் செய்துகொண்டனர். இந்த இரு தரப்பு பழங்குடி மக்களின் வழித்தோன்றல்கள் இன்றும் இமயமலைப் பகுதிகளில் வசிப்பதாக பலரும் நம்புகின்றனர். இவர்களின் உயரம் 4 $\frac{1}{2}$ அடி மட்டுமே ஆகும். நன்கு வளர்ந்த ஒருவரின் நிறை 60 இறாத்தல்களாக இருக்கும். எவ்வாறாயினும் இவர்களின் மூதாதையர்கள் ட்ரோபா வாசிகளா? என்பதை அறிய இனி ஒருபோதும் வாய்ப்புக் கிடைக்காது. எனவேதான் 'ட்ரோபா' பாறைத் தட்டுக்கள் உலகின் மர்மங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றன.



## விஞ்ஞானிகளின் முடிவு

இமயமலைக் கற்குகைகளில் இருந்து கிடைத்த இந்த பாறைத் தகடுகள் 'ட்ரோபா மர்மங்கள்' என்றே அழைக்கப்படுகின்றன. ஏனெனில், பண்டைய காலத்தில் இப்பகுதியில் 'ட்ரோபா' எனும் பழங்குடியினர் வாழ்ந்துள்ளனர். உண்மையில் ட்ரோபாக்கள் என்போர் யாவர்? என்பது இன்னும் சரிவர உறுதிப்படுத்தப்படவில்லை. இவர்களை Dropas மற்றும் Drok - Pa அல்லது Dzopa என்றும் அழைப்பர்.

எவ்வாறாயினும், இந்தப் பழங்குடியினர் பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அவை சர்ச்சைக்குரியவை. சிலர் இவர்களை வேற்றுக்கிரகங்களைச் சேர்ந்த குள்ளர்கள் என்பர். இவர்கள் 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திபெத் தேச எல்லையில் தரையிறங்கியதாகவும் கூறப்படுகின்றது. எனினும், இதனை மிகச்சரியாக நிரூபிக்க போதிய ஆதாரங்கள் இல்லை என்றும் கூறப்படுகின்றது. மாறாக, அசாதாரண மனித சடல எச்சங்களும் ட்ரோபா பாறைத் தகடுகளும் மட்டுமே கிடைத்திருக்கின்றன. எவ்வாறாயினும், இவை அனைத்தும் பெரும் பொய்களாக இருக்கக்கூடும் என்றே பெரும்பாலான விஞ்ஞானிகள் கருதுகின்றனர். (இ)



சடலம் ஒன்று







# அங்கூர் வாட் மீளத் திறக்கப்பட்டது

கம்போடியாவின் மிகப் பழமையான அங்கூர் வாட் எனும் கோயில் தொகுதியின் புனரமைப்பு வேலைகள் நிறைவுபெற்று, இம்மாதம் 3 ஆம் திகதி பொதுமக்களுக்காக மீளத் திறக்கப்பட்டது. இப்புனரமைப்பு வேலைகள் உலகின் மாபெரும் புதிரான பணியாக குறிப்பிடப்பட்டுள்ளன.

கோயிலின் புனரமைப்புப் பணிகளின்போது, அதன் மூன்றடுக்குக் கோபுரத்தின் சுமார் 300,000 கருங்கற்கள் ஒவ்வொன்றாகப் பிரித்தெடுக்கப்பட்டு மீளப் பொருத்தப்பட்டது. 1960 களில் ஆரம்பிக்கப்பட்ட கோயிலின் புனர்நிர்மாணப் பணிகள், கம்போடியாவின் உள்நாட்டுப் போரினால் தடைப்பட்டு, 1990 களில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

புனரமைக்கப்பட்ட கோயில் கோபுரத்தின் திறப்பு விழாவில் கம்போடிய மன்னர் நொரடோம் சிகாமணி மற்றும் பிரெஞ்ச் பிரதமர் பிரான்கொய்ஸ் ஃபிலன் ஆகியோர் கலந்துகொண்டனர். கோயிலின் புனரமைப்புப் பணிகளுக்காக, பிரான்ஸ் 10 மில்லியன் யூரோக்களை நிதியுதவியாக வழங்கியிருந்தது.



புனரமைக்கப்பட்ட கோயில் திறப்பு விழாவில் கம்போடிய மன்னர் (வலது) மற்றும் பிரான்ஸ் பிரதமர் (இடது) ஆகியோர் கலந்துகொண்டபோது....

## புனர் நிர்மாணம் ஆரம்பம்

1950 களில் கோயில் கோபுரம் இடித்து விழும் நிலையில் இருந்தது. பிரெஞ்ச் தொல்லியலாளர்களின் குழு ஒன்று இதனை ஆராய்ந்ததை அடுத்து, கோபுரத்தின் கருங்கற்களை ஒவ்வொன்றாகப் பிரித்தெடுத்து மீளப் பொருத்தத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய, சுமார் மூன்று லட்சம் கருங்கற்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் இலக்கமிடப்பட்டு சுற்றி இருந்த காடுகளில் அடுக்கப்பட்டன. எனினும், இத்தகைய புனர்நிர்மாண வேலைகள் உள்நாட்டுப் போரினால் தடைப்பட்டன. அத்துடன், மீள் நிர்மாணத்திற்குத் தேவைப்படும் அனைத்து ஆவணங்களும் 1975 ஆம் ஆண்டில் ஆட்சியைக் கைப்பற்றிய கெமர் ரூஜ் ஆட்சியாளரினால் அழிக்கப்பட்டன. பின்னர், 1995 ஆம் ஆண்டில் இந்த வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. புனரமைப்புக்குப் பின்னர் சுமார் 10,000 கருங்கற்கள் எஞ்சியுள்ளன. அவை கோயிலைச் சூழவுள்ள காடுகளில் அடுக்கப்பட்டிருக்கின்றன.

## கோயில் வரலாறு

11 ஆம் நூற்றாண்டுக்குரியதாகக் கருதப்படும் அங்கூர் வாட், மத்திய காலத்தில் கம்போடியாவில் நிலவிய கெமர் பேரரசுக்குரிய அங்கூர் பிராந்தியத்தில் அமைந்துள்ளது. இக்கோயில் இரண்டாம் சூரியவர்மனால் (கி.பி. 1113-1150) கட்டப்பட்டதாகும். 'அங்கூர் வாட்' என்பது கம்போடியாவின் அங்கூர் பிராந்தியத்திலுள்ள இந்துக் கோயில் தொகுதியாகும். கெமர் மொழியில் 'வாட்' என்றால் தமிழில் 'கோயில்' என்று அர்த்தப்படுகின்றது.

சுமார் ஐநூறு ஆண்டுகளாகக் கவனிப்பாரற்று காட்டில் மறைந்துகிடந்த அங்கூர் வாட் நகரமும் உலகின் அற்புதக் கோயில்களில் ஒன்றான அங்கூர் கோயிலும் 1861 ஆம் ஆண்டளவில் கண்டுபிடிக்கப்பட்டன. 802 ஆம் ஆண்டு முதல் 854 ஆம் ஆண்டு வரை வாழ்ந்த மன்னர் ஜெயவர்மனால் உருவாக்கப்பட்ட அங்கூர் நகரம் மத்திய காலத்தில் கெமர் பேரரசின் தலைநகராக விளங்கியது. மன்னர் குடும்பத்தினர் இங்கிருந்த கோட்டைக்குள் வசித்தனர். மக்கள் கோட்டைக்கு வெளியே வசித்தனர். கோட்டைக்கு வெளியே ஒரு மைல் தூரத்திலேயே அங்கூர் வாட் கோயில் அமைந்திருந்தது.



அங்கூர் வாட் வளாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லட்சுமி செய்த தவறு



லட்சுமி எனும் பெண் ஒரு கீரியை வளர்த்து வந்தாள். அந்தக் கீரியும் லட்சுமியிடம் அன்பாக நடந்துகொள்ளும். ஒருநாள் லட்சுமி தனது குழந்தையைப் பாதுகாப்பதற்கு கீரியை காவலுக்கு வைத்துவிட்டு கடைக்குப் புறப்பட்டாள்.

லட்சுமி புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தில் ஒரு நல்லபாம்பு அந்த வீட்டிற்குள் நுழைந்தது. அதைக் கவனித்த கீரி அதனுடன் நீண்ட நேரம் சண்டையிட்டு அதைக் கொன்று குழந்தையைக் காப்பாற்றியது. இதனால், கீரியின் வாயெல்லாம் பாம்பின் இரத்தம் படிந்திருந்தது. அத்துடன், அது தன் எஜமானியின் வருகையை எதிர்நோக்கி வாசலில் காத்திருந்தது. லட்சுமி கடையிலிருந்து வீட்டிற்குத் திரும்பினாள். வீட்டிற்கு வெளியே வாயில் இரத்தத்துடன் கீரி நின்றுகொண்டிருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டாள். அது தன் குழந்தையை கடித்துக் கொன்றுவிட்டது என்று நினைத்து ஆத்திரத்துடன் வெளியிலிருந்த ஒரு கல்லை எடுத்து கீரியின் மீது போட்டு அதனைக் கொன்றுவிட்டாள்.

வீட்டிற்குள் நுழைந்ததும் நல்ல பாம்பு இறந்து கிடப்பதைப் பார்த்த லட்சுமி அதிர்ச்சி அடைந்தாள். இறந்து கிடக்கும் நல்லபாம்பின் அருகில் குழந்தை கைகால்களை அசைத்து விளையாடிக் கொண்டிருந்தது.

நிலைமையைப் புரிந்துகொண்ட அவள் அவசரப்பட்டு என்ன ஏது என்று யோசிக்காமல் தன் அன்பான கீரியை கொன்றுவிட்டோமே என மனம் வருந்தி லட்சுமி புலம்பத் தொடங்கினாள்.

எம்.எச்.அன்ஷப்,
மின்ஹாத் தே.பாட.,
திக்குவல்லை.

# பிளனேரியா (Planaria)



பிளனேரியா ஒட்டுண்ணியல்லாத ஒருவகைத் தட்டைப்புழுவாகும். இவை உவர் நீரிலும், நன்னீரிலும் வாழும். சில இனங்கள் தரையிலும் வாழும்.

இவற்றின் உடல் 3mm, 12mm நீளம் உடையது. மேலும், உடல் இருபக்கச் சமச்சீருடையது. உடல் கிடையாக அல்லது நெடுக்காக வெட்டப்படும்போது, உடலைப் பூரணப்படுத்திக்கொண்டு, புதிய அங்கியாக வளரும். உடலின் முன்புறமாக (தலைப்புகுதியில்) ஒளிக்கு உணர்ச்சியுள்ள ஒரு சோடி கட்டமைப்புகள் உண்டு. இவை 'கட்புள்ளிகள்' எனப்படும். இதன் உடலில் எளியதொகுதிகள் உண்டு. இதன் வாய் வயிற்றுப் புறமாக அமைந்துள்ளது. இது வெட்ட வெட்ட உயிர் பெறும் தட்டைப்புழுவாகும். பிளனேரியாவில் ஆண்-பெண் இலிங்க உறுப்புகள் இரண்டும் ஒரே விலங்கில் அமைவதால் அவை இருபாலுக்குரிய இலிங்க ஈருருவுடைமை, விலங்குகள் ஆகும்.



எச்.எம்.அஸ்லம்,
ஒட்டமாவடி தே.பாட.,
ஒட்டமாவடி.

# மழை

கொட்டும் மழை கொட்டட்டும்
குளங்கள் யாவும் நிறையட்டும்

உணவு எமக்கு கிடைக்கட்டும்
உயிர்கள் வாழ உதவட்டும்

உழைக்கும் மனிதன் மகிழட்டும்
உலகம் எங்கும் செழிக்கட்டும்

ஆறுகளில் வெள்ளம் பாயட்டும்
மரங்கள் யாவும் பூக்கட்டும்

வசந்தம் எம்மை நாடட்டும்
இன்பம் எங்கும் பொங்கட்டும்

எம்.என்.அப்துல்லா,
அல்-அஸ்ஹர் நவோத்யா பாட.,
ஹெம்மாதகம



# ஒரு வரி செய்திகள்

- காதுள்ள ஊசிகளை முதலில் கண்டறிந்தவர்கள் - சீனர்கள்.
- உலகிலேயே லேசான உலோகம் - லிதியம்
- ஐஸ்கிறீமைக் கண்டறிந்தவர் - ஜெரால்ட் டிஸ்லேன், (கி.பி.1620)
- ஐந்து சூரியன்கள் உதிப்பது போன்று காணப்படும் இடம் - சீனாவில் உள்ள சிங் நைவிஸ் கு-
- 2014 இல் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ள இடம் - ரஷ்யா லோச்சி.
- வளிமண்டலத்தில் உள்ள ஐந்தாவது அடுக்கு - மெக்னட்டோஸ்பியர்.
- மயில் துத்தத்தின் ரசாயனப் பெயர் - காப்பர் சல்பேட்
- 'குருதேவ்' அன்று அழைக்கப்படுபவர் - ரவீந்திரநாத் தாகூர்
- அக்னி, பிருத்வி ஏவுகணைகளை வடிவமைத்தவர் - ஏ.பி.ஜே-அப்துல்கலாம்
- 'புயலடிக்கும் நகரம்' என்று அழைக்கப்படுவது - சிகாகோ

# துணுக்குகள்



- பெண் கடற்குதிரை அண்ணளவாக 200 முட்டைகளை ஆண் கடற்குதிரையின் பையினுள் இடுகின்றது.
- உலகில் உள்ள முழுக் கடற்பரப்பிலும் 32 வகையான கடற்குதிரைகள் காணப்படுகின்றன.



- சீனாவின் கலாசாரச் சின்னமாக 'பென்டா' விளங்குகின்றது.
- 420 அதிர்வைக் குறித்துக் கொள்ளும் கருவி 'புவி அதிர்வு மானி' எனப்படுகின்றது.
- பறக்கும் அணில் எமது நாட்டுக்கு உரித்தான ஒரு விலங்காகும்.

எம்.எஃப்.மிஃப்லா, கெகுனகொல்ல தே.பாட.

# இலங்கையின் மாகாணங்களும் மாகாண மலர்களும்

1. மேல் மாகாணம் - White Lotus (வெள்ளைத் தாமரை)
   (கொழும்பு, கம்பஹா, களுத்துறை)
2. தென் மாகாணம் - Heen Bowitiya (ஹீன் போவிட்டியா)
   (காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை)
3. மத்திய மாகாணம் - Maha Rathmala (மஹா சிவப்பு)
   (கண்டி, மாத்தளை, நுவரெலியா)
4. ஊவா மாகாணம் - Fox- Tail Orchid (நரிவால் ஓர்கிட்)
   (பதுளை, மொனராகலை)
5. வடமத்திய மாகாணம் - Showers of Gold (எசல பூ)
   (அநுராதபுரம், பொலன்னறுவை)
6. வடமேல் மாகாணம் - Etteriya (எட்டேரியா)
   (குருநாகலை, புத்தளம்)
7. வட மாகாணம் - Vishnu Krantiya (விஷ்ணு கிராந்தி)
   (யாழ்ப்பாணம், வன்னி)
8. சப்ரகமுவ மாகாணம் - Wesak Flower (வெசாக் மலர்)
   (இரத்தினபுரி, கேகாலை)
9. கிழக்கு மாகாணம் - Goda Manel (கொட மானெல்)
   (திருகோணமலை, மட்டக்களப்பு, திகாமடுல்ல)

ஜே.டபிள்யூ.பாத்திமா,
அல்-ஹிக்மா மஹா வித்தியாலயம், கம்பளை.

# முருகைக் கற்பாறைகள்




ஆழமற்ற கடல் நீருள்ள கடற்கரை சூழற்தொகுதியிலேயே முருகைக்கற் பாறைகள் காணப்படுகின்றன. 'பொலிப்கள்' எனப்படும் சிறிய அங்கிகள் தமது பாதுகாப்பிற்காக, கல்சியம் காபனேட்டினாலான உறையொன்றைத் தமது உடலைச்சுற்றி உருவாக்கும். இப்பொலிப்புக்கள் ஒரே இடத்தில் சேரும்பொழுது முருகைக்கற் பாறைகள் உருவாகின்றன.

இவற்றின் வளர்ச்சிக்கு 20°c - 24°c வெப்பநிலையும் 30-35% உவர்தன்மையும் அவசியமாகும். இலங்கையின் தென்மேற்கு கடற்கரையோரப் பகுதியில் ஹிக்கடுவை, காலி, அம்பலாங்கொடையும் கிழக்கில் கல்குடா, பாசிக்குடா, குச்சவெளியிலும் வடமேல் மாகாணத்தில் கற்பிட்டி, கந்தர்வெளியிலும் இவை காணப்படுகின்றன. முருகைக் கல்லில் காணப்படும் கல்சியம் காபனேட் சுண்ணாம்பு உற்பத்தியிலும் சீமெந்து உற்பத்தியிலும் மூலப்பொருளாகக் காணப்படுகின்றது. இதனால், இவை அதிகளவில் அகழப்பட்டும் வருகின்றன.

ரா.பிரசன்யா,
என்பீல்ட் த.ம.வித்., டிக்கோயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒவ்வொரு வாரமும் மாணவர்களுக்காக பல்வேறு அறிவுசார் பகுதிகளைத் தாங்கி வருகின்றாய். 'நெல்சன் மண்டேலா', 'ஓசோன் படை', 'சிந்தித்து செயற்பட்டால் (சிறுகதை), 'தெரிந்துகொள்வோம்', 'விண்வெளித் தகவல்கள்' உட்பட, அனைத்தும் எமக்கு நன்மை அளிப்பதாக உள்ளன.

**க.ஷதுர்ஷனன், தில்லைநகர், திருகோணமலை.**

அழகிய பறவை நைட்டிங்கேலின் அழிவு பற்றி உன்னால் அறிந்துகொண்டேன். இன்றளவில் ஏராளமான உயிரினங்கள் அழிவுகளை எதிர்நோக்கியுள்ளன. இவற்றுக்குப் பிரதான காரணம், சூழல் மாசடைவதேயாகும். எனவே, சூழலைப் பாதுகாப்பதற்கான பாரிய பொறுப்பு மனிதனுக்கே [illegible]ள்ளது.

**எம்.எஃப்.ஹம்சியா, பாணகமுவ, குருநாகல்.**

# விஜய் வாசகர் மடல்



கணினியுடன் தொடர்பான தகவல்கள் எம்மைக் கவர்கின்றன. மேலும் பல தகவல்களை [illegible]ன்னிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். 'புதிய இணைய சேவைகள்', 'விரலில் அணியும் மோதிர மவுஸ்' என்பன சிறப்பானவை.

**ஷிராஸ் மஹ்மூத், தெனியாய வீதி, இறக்குவானை.**

'சனத்தொகை கணக்கிடும் விதம்', 'நெல்சன் மண்டேலா', 'சாதனையாளர்', 'தாவர ஒட்டு முறை' உட்பட,பல அறிவுபூர்வமான தகவல்களையும் பொது அறிவினையும் உன்னிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

**சி. அருந்ததி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

'தாவர ஒட்டுமுறை' எனும் ஆக்கம் எனது உயிரியல் பாடத்திற்கு மிகவும் பிரயோசனமாக இருந்தது. 'நீர்ப்பஞ்சம் தீர்க்கும் பனிக்கட்டிகள்' எனும் சிறு ஆக்கம் பாரிய பிரச்சினையொன்றைத் தீர்ப்பதற்கான முயற்சி பற்றி விளக்கியிருந்தது. 'விண்வெளித் தகவல்கள்' பகுதியும் சுப்பர்.

**க.நேசமணி, கிண்ணியா வீதி, திருகோணமலை.**

'நெல்சன் மண்டேலா' பற்றிய ஆக்கம் அறியாத பல விடயங்களை அள்ளி வழங்கியிருந்தது. 'சனத்தொகை கணக்கிடும் விதம்', 'ஆயுள், ஆரோக்கியத்தை நிர்ணயிக்கும் சூரிய ஒளி', 'ராட்சதப் பனிக்கட்டிகள்', 'கணினி தொடர்பான அம்சங்கள்' உட்பட, அனைத்தும் சிறப்பானவை. 'இராமாயணம்' வாசகர்களின் ஆவலைத் தூண்டும் விதத்தில் நகர்கின்றது.

**எம்.உமைர், ரொபட் குணவர்தன மாவ., கிருலப்பனை.**

'நிறவெறிக்கு எதிராகப் போராடிய நெல்சன் மண்டேலா', 'தாவர ஒட்டு முறை' போன்ற ஆக்கங்கள் சுப்பர். விஜய்யே! நீ எமது பாடசாலைக் கல்விக்கும் அப்பால் எமக்கு அறிவினைப் பெற்றுத் தருவதில் முன்னிலை வகிக்கின்றாய்.

**எஃப்.சஹ்னா; எம்.ஸஹ்ரான், அல்-அதான் ம.வித்., பதுளை.**

'விஞ்ஞானப் புதிர்', 'தெரிந்து கொள்வோம்', 'ஓசோன் படலம்', 'ஆச்சரியத்தை அறிந்துகொள்வதற்காக', 'சிறுகதைகள்' போன்றவற்றை விரும்பி வாசித்தேன். 'விண்வெளித் தகவல்கள்', 'சாதனையாளர்' எனும் 'பகுதிகளூடாக, நாம் அறிந்திராத தகவல்களை அறிந்துகொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது. நீ மேலும் முன்னேறிச் செல்ல வாழ்த்துகின்றேன்.

**எஃப்.இல்மா இல்முடீன், கொஹுங்க, கடுகன்னாவை.**

இந்த இதழில் (27.07.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.


அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 03.08.2011.

அனுப்ப வேண்டிய முகவரி: வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.


## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக 1



## சரியான எண்ணிக்கையை தெரிவுசெய்து எழுதுக 2




## 3




அருகிலுள்ள தரவுகளுக்கேற்ப இலக்கமிடப் பட்டுள்ள பகுதிகளை நிறந்தீட்டுக

## சரி, பிழை கூறுக 4

1. ஜேர்மனியின் தலைநகர் ஜெனீவா ஆகும். ( )
2. மின்குமிழைக் கண்டறிந்தவர் தோமஸ் அல்வா எடிசன் ஆவார். ( )
3. இரும்புச்சத்துக் குறைபாட்டினால் குருதிச்சோகை நோய் ஏற்படுகின்றது. ( )
4. சார்க் அமைப்பில் ஆறு நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ( )

## ஒத்தகருத்துச் சொல் தருக 5

1. கண் - ......................
2. நீர் - ......................
3. பாடல் - ......................
4. நாள் - ......................




தயாரிப்பு - நூஸ்பா கௌஸ்

அற்லஸ் அறிவுக்கு விருந்து 323
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 320 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எஃப்.ஷம்றா, தேவாலய வீதி, பாலையூற்று.

**போட்டி: 02**
எம்.அஷ்ஃபாக், குருந்துகாஎல, அக்குறனை.

**போட்டி: 03**
ந.ஹரிதாசன்,
பழைய கூட்டுறவு கடை வீதி, பெரியநீலாவணை-01.

**போட்டி: 04**
கி.பிரியதுவாரகா, கல்லூரி வீதி, மானிப்பாய்.


**போட்டி: 05**
எஃப்.ஷஹானா, ராசகல வீதி, பலாங்கொடை.

பாராட்டுப் பெறுவோர்:


- ★ அரபாத் இப்ராஹீம், அன்நூர்.
- ★ என்.டீனா, கிண்ணியா-01
- ★ நே.தமிழினி, கிளிநொச்சி.
- ★ சறாபா ஜெஸ்றின், மருதமுனை.
- ★ ம.கபிலன், திருநாவற்குளம்.
- ★ எஃப். விஃப்ரா, கல்பொக்க.
- ★ பி.சுதர்ஷன், நோர்வூட்.
- ★ ஆர்.சாக்கீர், மறதன்கடவல.
- ★ எஸ்.நிஹாரா, ஹ[illegible]ரீமலுவ.
- ★ ஏ.ஷானாஸ், மல்வானை.

## அறிவுக்கு விருந்து - 320 விடைகள்

**போட்டி: 01**



**போட்டி: 02**



**போட்டி: 03**




**போட்டி: 04**

1. நீ நேற்று வந்தாய்.
2. புத்தகங்கள் அலுமாரியில் இருந்தன.
3. கொக்கு குளத்திலுள்ள மீன்களைப் பிடித்தது.
4. கொடிகள் காற்றில் அசைந்து ஆடின.
5. அவர்கள் இன்று கடைக்கு வருவார்கள்.

**போட்டி: 05**

1. ஈரான் -மஜ்லிஸ்
2. நோர்வே - ஸ்டோர்டிங்
3. நேபாளம் - நெஷனல் பஞ்சாயத்
4. இஸ்ரேல் - நெஸட்
5. ஐக்கிய அமெரிக்கா - கொங்ரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தளம் வடக்கு கோட்டக் கல்விப் பிரிவிற்குட்பட்ட ஆரம்பப் பிரிவு பாடசாலைகளினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுற்றாடல் பாசறை அண்மையில் புத்தளம் ஸாஹிரா கல்லூரி ஆரம்பப் பிரிவில் இடம்பெற்றது. அன்றைய தினம் அங்கு இடம்பெற்ற சிறுவர் சந்தையில் புத்தளம் நகர சபைத் தலைவர் கே.ஏ.பாயிஸ் பொருட்களை வாங்குவதை படத்தில் காணலாம்.

(எஃப்.நஹ்ரஸத்-புத்தளம்)



கும்பலங்க, அல்-பதாஹ் பாலர் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற மாணவர் சந்தையின் ஒரு பகுதியைப் படத்தில் காணலாம்.

*(தகவல்: ஐ.கே.துல்பியா)*



எம்.நபீல்,
அல்-ஹிக்மா ம.வித்., கம்பளை.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு




லைனப் ருவைஸ்தீன்,
அல்-அக்ஸா மு. வித்., வடதெனிய.



சு.நவநீதா,
விவேகானந்தா இந்துக் கல்.,
கொழும்பு-15.



எஃப்.திப்லா,
குளியாப்பிட்டி மு.வித்.,
குளியாப்பிட்டி.



கே.ரஜீவன், பண்டாரவளை.



ஜெம்சித் ஹஸன்,
அல்-அஸ்ரக் தே.பாட., நிந்தவூர்.



ம.கபிலன்,
வவுனியா தமிழ் ம.வித்., வவுனியா.



எஸ்.ஜனகன்,
கிங்ஸ்டன் சர்வதேச பாட.,
வெள்ளவத்தை.

## விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



கலஹா-மல்பேரி டிவிசனைச் சேர்ந்த சிவக்குமார்-கோகிலம்பால் தம்பதியரின் செல்வப் புதல்வன் எஸ்.கபிலேஸ், 22.07.2011 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.



கண்டி-மாப்பன வத்ரயைச் சேர்ந்த குணசீலன்-ஜெயா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஜெரிஷ்சன், 24.07.2011 அன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் சகல கலைகளையும் கற்று, குழந்தை யேசுவின் ஆசியுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.



நானுஓயா-எபட்ஸ்போட்டை வசிப்பிடமாகக் கொண்ட மயில்வாகனம்-இளவேனி தம்பதியரின் செல்வப் புதல்வி சருன்யா ஜான்சி, 31.07.2011 அன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் இறையருள் பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

## ஓவியம் வரைவோம் - 60

வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூப்

# மலர் அலங்காரங்கள்


நாம் சென்ற பாடங்களில் சிங்கள பாரம்பரிய அலங்கார வகைகள் சிலவற்றை நோக்கினோம். இனி, அத்தகைய பாரம்பரிய அலங்காரங்களில் மலர்களாலான அலங்காரங்களை நோக்குவோம்.

**சீன மலர்:** சீன மலர் அலங்காரமானது, உலோகப் பொருட்கள், மரச் சிற்பங்கள், சுவர் ஓவியங்கள், புத்தக அட்டைகள் போன்றவற்றில் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.



சீன மலர்

**தாமரை மலர்:** தாமரை மலரும் அதன் பாகங்களும் புனிதப் பொருட்களாகவும் பக்தி, தூய்மை, செல்வம், கல்வி போன்றவற்றை எடுத்துக்காட்டவும் பயன்படுத்தப்படுகிறது. பௌத்த விகாரைகளில் தாமரைச் சின்னங்களை அதிகமாகக் காணலாம். தவிர, மரவேலைகள், கற்செதுக்கலிலும் இதனைக் காணலாம். கண்டிய கால ஓவியங்களிலும் தாமரை அலங்காரங்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. பத்மாசன நிலையிலுள்ள புத்த சிலைகளிலும் ஏனைய பல இடங்களிலும் தாமரைச் சின்னங்களை அதிகளவில் காணலாம்.



தாமரை மலர்

**கடுபுல் மலர்:** கடுபுல் மலர் நாகலோகத்தில் இருக்கும் மலர் எனக் கருதப்படுகின்றது. யப்பாஹுவ, தெகல்தொருவ, எம்பக்கே, கடலாதெனிய, மதவெல போன்ற இடங்களில் காணப்படும் கலைப்படைப்புகளில் இந்த கடுபுல் மலர் அலங்காரங்களைக் காணலாம்.



கடுபுல் மலர்

**பினர மலர் (பினர மல):** பினர மலர் அலங்கார அமைப்புகள் பல இடங்களில் காணப்படுகின்றன. இம்மலர் நான்கு இதழ்களைக்கொண்டது. இதனை கற்றூண்களின் கீழ்பகுதிகளிலும் நடுப்பகுதிகளிலும் காணலாம். பொலன்னறுவை வட்டதாகை உட்பட, 'அம்பலம்' போன்ற தங்குமிடங்களின் கற்றூண்களிலும் இந்த அலங்காரம் சிறப்பாக செதுக்கப்பட்டுள்ளது.



பினர மலர்

(தொடரும்)



எஸ்.சதீஸ்குமார்,
கணேஷா தமிழ் வித்., ரொசல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்திரத்தால் நரியையும் மிஞ்சிய மனிதன்



(சென்றவாரத் தொடர்ச்சி)

மனிதன் சொன்னதைக் கேட்ட நரி யோசித்தது. 'இந்த மனிதனைப் பாம்பிடம் இருந்து காப்பாற்றுவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. ஆனால், இவனைக் காப்பாற்றுவதால் நமக்கென்ன லாபம்? மனிதன் கோழி வளர்ப்பதுண்டு. இவனும் கோழி வைத்திருக்கலாம். எனவே, இவனைக் காப்பாற்றுவதற்காக ஐந்து கோழிகளைப் பரிசாகக் கேட்போம். அதற்கு அவன் உடன்பட்டால் எப்படியாவது அவனைக் காப்பாற்றிவிடுவோம்' என்றவாறாக நரி எண்ணிக்கொண்டு, பாம்பு கவனியாதிருந்தபோது, தன் முன்னங்காலை உயர்த்தி ஐந்து விரல்களையும் காட்டி 'ஐந்து கோழிகள் தனக்குப் பரிசாக வேண்டும்' என மனிதனுக்குச் சைகை காட்டியது. நரியின் சைகை மனிதனுக்குப் புரியவில்லை. தன்னை இந்த இக்கட்டிலிருந்து காப்பாற்றுவதாக, நரி சைகை மூலம் தெரிவிக்கின்றது என்று நினைத்த மனிதன் 'சரி' என்று தலையை அசைத்தான். மனிதன் சரி எனத் தலையை அசைத்ததும் ஐந்து கோழிகளையும் அப்போதே பெற்றுக்கொண்டது போன்ற உவகையில் நரி மனிதனைக் காப்பாற்ற எண்ணமிட்டது.

தனக்கு எதுவுமே விளங்காதது போன்று பாசாங்கு செய்தவாறே, பாம்பையும் மனிதனையும் பார்த்து, "நீங்கள் கூறுவது ஒன்றும் எனக்குப் புரியவில்லை. முன்னர் நிகழ்ந்த சம்பவத்தை நான் நேரில் ஒருமுறை பார்க்க வேண்டும். அப்போதுதான் என்னால் சரியான தீர்ப்புக் கூற முடியும். இதோ, பெரிய மரமொன்றிருக்கிறது. முதலில் பாம்பு இந்த மரத்தின் மேல் ஏறி, அதன் கிளைகளில் முன்பிருந்தது போல இருக்கட்டும்' என்று நரி கூறியது. பாம்பும் அவ்வாறே செய்தது. இப்போது நரி மனிதனை நோக்கி, இம்மரத்திற்குத் தீ வைக்கும்படி கூறியது. மனிதனும் அவ்வாறே செய்தான். பின்னர் தன் கையிலிருந்த நீண்ட தடியினால் பாம்பைக் காப்பாற்ற முனைந்தான் மனிதன். நரி அவனைப் பார்த்து, "முட்டாள் மனிதனே! என்ன காரியம் செய்யப் பார்க்கிறாய்? பாம்பு எரிந்து சாகட்டும்" என்று கூறியது. மனிதன் தன் முட்டாள்தனத்தை எண்ணி வெட்கமடைந்தான். தன்னைக் காப்பாற்றியதற்காக நரிக்கு நன்றி தெரிவித்தான்.

நரி அவனை நோக்கி, "இப்போது நீ எனக்குத் தருவதாகக் கூறிய ஐந்து கோழிகளையும் கொண்டு வா" என்றது. நரியின் வார்த்தையைக் கேட்ட மனிதன் ஆச்சரியமடைந்தான். பின்னர், நரி தன் சைகை மூலம் ஐந்து கோழிகளைத் தன்னிடம் கேட்டிருப்பதை அறிந்த மனிதன், தன் உயிரைக் காப்பாற்றிய நரிக்கு ஐந்து கோழிகளைக் கொடுக்க இசைந்தான்.

நரியை அழைத்துக்கொண்டு அவன் தனது வீடு நோக்கி நடந்தான். மனிதனின் வீட்டு வேலி எல்லையில் நரி நின்றுகொண்டது. வீட்டுக்குச் சென்ற மனிதன் ஒரு சாக்கினை எடுத்தான். பின்னர் கோழிக் கூட்டினுள் நுழைந்து ஒவ்வொரு கோழியாகப் பிடித்து சாக்கில் போட ஆரம்பித்தான். கோழிகளின் சத்தத்தைக் கேட்டு, அவனது மனைவி அங்கு வந்தாள். "ஏன் கோழிகளைப் பிடித்து சாக்கில் போடுகின்றீர்கள்?" என்று கேட்டாள்.

அவன் காரணத்தைக் கூறியதும் அவள் கோபமடைந்தாள். "நீங்கள் நரிக்குக் கொடுப்பதற்காகவா நான் பாடுபட்டுக் கோழி வளர்க்கிறேன்? பேசாமல் அந்தச் சொறி நாயைச் சாக்கில் போட்டு நரிக்கு கொடுத்துவிடுங்கள்" என்று கூறினாள். மனைவி கூறுவதும் அவனுக்கு சரியாகப்பட்டது. மூலையில் ஒதுங்கிக் கிடந்த சொறி நாயைச் சாக்கில் போட்டுக்கொண்டு நரியிருந்த இடத்துக்குச் சென்றான்.

மனிதனின் வரவை எதிர்பார்த்து ஆவலோடு காத்திருந்த நரிக்கு தூரத்தில் மனிதன் சாக்கோடு வருவதைக் கண்டதும் நாவில் எச்சில் ஊறியது. நரியிடத்தில் வந்த மனிதன் சாக்கினை அதனிடம் கொடுத்து விட்டு அந்த இடத்தை விட்டும் அகன்றான்.


'தற்போதைக்கு ஒரு கோழியை எடுத்து ருசி பார்ப்போம்' என்று எண்ணிய நரி, சாக்கினை மெதுவாக அவிழ்த்ததும், சாக்கிலிருந்த சொறி நாய் உறுமிக்கொண்டே வெளியில் பாய்ந்து நரியைத் துரத்திக்கொண்டு ஓடியது.

நாய்க்குப் பயந்தோடிய களைப்பில் தான் முன்பு படுத்திருந்த பாறையின் மீது ஏறிப் படுத்துக்கொண்ட நரி, களைப்பு நீங்கி நிதானமாக மூச்சு விடத் தொடங்கியது.

'என்னுடைய நன்மைக்காக நான் எத்தனையோ மிருகங்களைத் தந்திரமாக ஏமாற்றியிருக்கின்றேன். தந்திரத்தில் என்னை வெல்வார் எவருமில்லை என்று நான் இறுமாந்திருக்கின்றேன். ஆனால், முழு முட்டாளாகத் தோன்றிய அந்த மனிதன் என்னை ஏமாற்றி விட்டானே!' என தனக்குத்தானே பேசிக்கொண்டது நரி.

**ஏ.எஸ். அமாணி**

# புதையல்



முன்னொரு காலத்தில் ஆனந்தபுரம் என்ற ஊரில் ஆதவன், மாதவன் என்ற இரு நண்பர்கள் வாழ்ந்து வந்தனர். ஆதவன் பேராசைக்காரன், சுயநலவாதி. ஆனால், மாதவன் நேர்மையானவன், நல்லவன்.

இருவருமே விறகு வெட்டி அதை விற்று வாழ்க்கை நடத்தி வந்தனர்.

ஒருநாள், நண்பர்கள் இருவரும் விறகு வெட்டிக்கொண்டே பேசிக்கொண்டு இருந்தனர்.

அப்போது, "எனக்கு மட்டும் புதையல் கிடைத்தால் அதை வைத்து நான் குபேரனாகி விடுவேன்" என்றான் ஆதவன்.

"அப்படி சொல்லாதே நண்பா, புதையல் கிடைத்தால் அதை அரசரிடம் ஒப்படைப்பதே சிறந்தது" என்றான் மாதவன்.

இப்படியே வாக்குவாதம் முற்றி இருவருக்கும் மோதல் ஏற்பட்டு பேசுவதையே நிறுத்திவிட்டனர்.

அதன்பின்னர் இருவரும் தனித்தனியே சென்று விறகு வெட்டினர்.

ஒரு நாள்....

மாதவன் விறகு வெட்டும்போது, அந்த மரத்தின் அடியிலிருந்து பொற்காசுகள் சிதறின. உடனே அவற்றை எடுத்து மாதவன் அரசரிடம் ஒப்படைத்தான்.

இந்த செயலைப் பாராட்டும் வகையில் அவனுக்கு ஒரு மரக்கடை அமைத்துக் கொடுத்தார் அரசர்.

அடுத்த நாளே ஆதவனுக்கும் புதையல் ஒன்று கிடைத்தது. அதில், மாதவனுக்கு கிடைத்தாற் போலவே தங்க நாணயங்கள் இருந்தன.

புதையலுக்கு ஆசைப்பட்ட ஆதவன் அதை அப்படியே தன் வீட்டில் மறைத்து வைத்து விட்டான். பின்னர் அதிலிருந்து சிறிது தங்கக் காசுகளை எடுத்து கடை வீதிக்குச் சென்று வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கினான்.

ஒருநாள் அவன் கொடுத்த அந்த தங்கக் காசுகளை வியாபாரி சோதனை செய்தபோது, அது போலி என்று தெரியவந்தது.

உடனடியாகவே வியாபாரி இது குறித்து வழக்கு ஒன்றைத் தொடர்ந்தார்.

மறுநாள், போலி தங்கக்காசுகளைக் கொடுத்து ஏமாற்றியதாக கடைக்காரன் கொடுத்த வாக்குமூலத்தின்படி அரசன் முன்பு நிறுத்தப்பட்டான் ஆதவன்.

இதனை அறிந்த ஆதவனின் நண்பன் மாதவனும் அரசவைக்கு விரைந்து சென்றான்.

மாதவன் அரசவைக்கு வந்ததும், ஆதவனைப் பார்த்து மற்றும் அவையில் உள்ளவர்களைப் பார்த்து மன்னர் உரையாடத் தொடங்கினார், "சில நாட்களுக்கு முன்பு நான் காட்டில் வேட்டையாடச் சென்றிருந்தேன். அப்போது, இரு நண்பர்கள் பேசியதைக் கேட்டேன். ஒருவன் புதையல் கிடைத்தால் அரசாங்கத்திடம் அதனை ஒப்படைப்பேன் என்றான். மற்றொருவனோ அதைத்தானே வைத்துக்கொள்வேன் என்றான். இருவரது நேர்மையைச் சோதிக்க, வழக்கமாக அவர்கள் மரம் வெட்டும் இடத்தில் போலிக்காசுகளைப் புதைத்து வைத்து, அது இருவருக்கும் கிடைக்கும்படியாகச் செய்தேன். இருவரும் தாம் சொன்னபடியே செயற்பட்டனர். நேர்மையாக நடந்துகொண்டதால் மாதவன் பிழைத்துக்கொண்டான். ஆதவன் மாட்டிக்கொண்டான்" என்றார் அரசர்.

உண்மையறிந்த அவையினர் மாதவனின் நேர்மையைப் பாராட்டினர்.

அப்போது, மாதவன் "மன்னா..... என் நண்பன் நல்லவன். ஏதோ ஏழ்மையின் காரணமாக, ஆசைப்பட்டு விட்டான். எனவே, அவனை மன்னித்து விடுங்கள்" என்றான்.

மன்னனும் அதை ஏற்று ஆதவனை விடுதலை செய்தான்.

"என்றுமே நேர்மையாக வாழ்ந்தால் அவமானம் இல்லை" என்று ஆதவனைப் பார்த்து கூறினான் மாதவன்.

"ஆம் நண்பா இந்த உண்மையை இப்போது தான் நான் உணர்ந்துகொண்டேன்" என்றான் ஆதவன்.

"சரி வா. நான் வைத்துள்ள மரக்கடையில் இருவரும் சேர்ந்தே வியாபாரம் செய்வோம். என்ன உனக்கு சம்மதம்தானே...?" என்று கேட்டான் மாதவன்.

"சரி" என தலையசைத்தான் ஆதவன்.

அன்றிலிருந்து ஏமாற்றுதல், பேராசை எல்லாவற்றையும் விட்டுவிட்டு மாதவனைப்போன்று நேர்மையாக வாழ ஆரம்பித்தான் ஆதவன்.


## விஜய் சந்தா விபரம்

| கொழும்பில் வசிப்போர் (நேரடியாகப் பெறுவதற்கு) | | கொழும்பிற்கு வெளியே வசிப்போர் (தபாலில் பெறுவதற்கு) | |
|---|---|---|---|
| 6 மாதத்திற்கு | ரூபா 390/= | 6 மாதத்திற்கு | ரூபா 780/= |
| 1 வருடத்திற்கு | ரூபா 780/= | 1 வருடத்திற்கு | ரூபா 1560/= |

கீழ்காணும் கூப்பனை நிரப்புங்கள். (ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது.)

பெயர் - ..............................

முகவரி - ..............................

தொ.பேசி - ..............................

பத்திரிகையின் பெயர் - ..............................

விஜய் Subscription For 6 Months/ 1 Year (அவசியமற்றதை வெட்டிவிடவும்)

கையொப்பம்/திகதி

மேற் காணப்படும் விபரத்திற்கேற்ப பணத்தை தபாலகத்தில் காசுக்கட்டளையாகச் செலுத்தி குறித்த காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் கந்தோர் - Slave Island Post Office என்று குறிப்பிடவும். குறித்த காசுக்கட்டளையையும் இங்கு நிரப்பப்பட்ட கூப்பனையும் ஒன்றாக இணைத்து பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி: SUBSCRIPTION MANAGER, Wijeya Newspapers Ltd., 8, Hunupitiya Cross Road, Colombo-02


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




ஆயுபோவன்
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் 'சீகிரியா' பற்றிய சிறு கட்டுரையைப் பார்ப்போம்

## සීගිරිය

1. ශ්‍රී ලංකාවේ බොහෝ කඳු හා පර්වත තිබේ. ඒ අතරින් සීගිරි පර්වතය ඓතිහාසික ප්‍රසිද්ධියක් උසුලයි.
2. කාශ්‍යප රජ සීගිරිය රජකම් කළේය.
3. සීගිරි පව්ව මත මාළිගා තැනුවේය; උයන් ඉදි කළේය; වැව් තැනුවේය.
4. සීගිරිය වටා පවුරු ඉදි කළේය.
5. සීගිරි පව්වේ ලස්සන සිතුවම් ඇන්දේය. සීගිරි සිතුවම් අවුරුදු 1500ට වඩා පැරණිය.
6. සීගිරි සිතුවම් නැරඹීමට ස්වදේශිකයෝද, විදේශිකයෝද පැමිණෙති.

## சீகிரிய

1. *ஸ்ரீ லங்காவே பொஹோ கந்து ஹா பர்வத திபே. ஏ அதரின் சீகிரி பர்வதய ஐதிஹாசிக பிரசித்தியக் உசுலய்.*
2. *காஷ்யப்ப ரஜ சீகிரியே ரஜகம் களேய.*
3. *சீகிரிய பவ்வ மத மாளிகா தெனுவேய; உயன் இதி களேய; வெவ் தெனுவேய.*
4. *சீகிரிய வ(ட்)டா பவுறு இதி களேய.*
5. *சீகிரி பவ்வே லஸ்ஸன சிதுவம் எந்தேய. சீகிரி சிதுவம் அவுருது 1500ட்ட வடா பெரணிய.*
6. *சீகிரி சிதுவம் நெரம்பீமட்ட சுவதேஷிகயோத, விதேஷிகயோத பெமினெதி.*

## சீகிரியா

1. இலங்கையில் பல மலைகளும் குன்றுகளும் இருக்கின்றன. இவற்றுள் சீகிரியாக் குன்று சரித்திரப் பிரசித்தி பெற்றது.
2. காசியப்ப மன்னன் சீகிரியாவை ஆட்சி புரிந்தான்.
3. சீகிரியாக் குன்றில் அரண்மனைகளைக் கட்டினான்; பூங்காக்களை அமைத்தான்; குளங்களைக் கட்டினான்.
4. சீகிரியாவைச் சுற்றி அரண்களைக் கட்டினான்.
5. குன்றில் அழகான ஓவியங்களை வரைந்தான். சீகிரிய ஓவியங்கள் 1500 ஆண்டுகள் பழமையானவை.
6. சீகிரியாவிலுள்ள ஓவியங்களைப் பார்வையிட உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் வருவார்கள்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. சீகிரியாக் குன்று சரித்திரப் பிரசித்தி பெற்றது.
.............................................................

ii. பூங்காக்களை அமைத்தான்.
.............................................................

iii. குன்றில் அழகான ஓவியங்களை வரைந்தான்.
.............................................................

**இடைவெளிகளை நிரப்புக**

1. කාශ්‍යප රජ .................... රජකම් කළේය.
2. සීගිරි පව්ව මත .................... තැනුවේය.
3. සීගිරිය වටා .................... ඉදි කළේය.
4. සීගිරි .................... අවුරුදු 1500ට වඩා පැරණිය.






'Will be' எனும் எதிர்கால துணை வினைச்சொல்லுடன், நிகழ்கால எச்சவினைச்சொல் (Present Participle) அதாவது 'ing' சேர்ந்த வினைச்சொல் கூட்டுச்சேர்ந்து உருவாகும் வாக்கியம், எதிர்கால தொடர் வாக்கியம் ஆகின்றது என முன்னைய பாடத்தில் கற்றோம் அல்லவா?

எனினும், 'will be' எனும் எதிர்கால துணை வினைச்சொல்லுடன், இறந்தகால எச்சவினைசொல் (Past Participle) கூட்டுச்சேர்ந்து உருவாகும் வாக்கியம், செயற்பாட்டு வினை (Past Voice) வாக்கியமாக அமைகின்றது. உதாரணங்களை செய்வினை (Active Voice) வாக்கியத்துடன் ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) நான் அந்தப் பொதியை அனுப்புவேன்.
I will send that parcel.
(செய்வினை வாக்கியம்-Active Voice)

(ஆ) அந்தப் பொதி என்னால் அனுப்பப்படும்.
That Parcel will be sent by me.
(செயற்பாட்டு வினை வாக்கியம் -Passive Voice)

**குறிப்பு:** Send என்பது நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb) இது மூலவினைச் சொல்லாகவும் (Stem Verb) விளங்குகின்றது.

- Sending- நிகழ்கால எச்சவினை (Present Participle)
- Sent- இறந்தகால எச்சவினை (Past Participle)

(இ) நீ அந்தக் குப்பையை எறிவாய்.
You will throw the garbage.
(செய்வினை வாக்கியம்-Active Voice)

(ஈ) அந்தக் குப்பை உன்னால் எறியப்படும்.
The garbage will be thrown by you.
(செயற்பாட்டு வினை வாக்கியம்-Passive Voice)

**குறிப்பு:**

- Throw (துரோ)- நிகழ்கால வினைச்சொல்-Present Tense Verb.
- Throwing-(துரோயிங்) - நிகழ்கால எச்சவினை -Present Participle.
- Thrown-(துரோன்) - இறந்தகால எச்சவினை -Past Participle.

(உ) நாங்கள் அந்தப் பொதிகளைக் கொண்டுவருவோம்.
We will bring the parcels.
(செய்வினை வாக்கியம் -Active Voice)

(ஊ) அந்தப் பொதிகள் எங்களால் கொண்டுவரப்படும்.
The parcels will be brought by us.
(செயற்பாட்டு வினை வாக்கியம்-Passive Voice)

**குறிப்பு:**

- bring- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb).
- bringing-நிகழ்கால எச்சவினை (Present Participle).
- brought- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb).
- brought- என்பது இறந்தகால எச்சவினையாகவும் (Past Participle) விளங்குகின்றது.

(எ) அவர்கள் உணவுகளை சமைப்பார்கள்.
They will cook the meals.
(செய்வினை வாக்கியம்-Active Voice)

(ஏ) உணவுகள் அவர்களால் சமைக்கப்படும்.
The meals will be cooked by them.
(செயற்பாட்டு வினை வாக்கியம்-Passive Voice)

**குறிப்பு:** Cook- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)

- Cooking- நிகழ்கால எச்சவினை (Present Participle)
- Cooked- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
- Cooked- என்பது இறந்தகால எச்சவினையாகவும் (Past Participle) விளங்குகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபாமா, தலாய்லாமா நேரடியாக சந்திப்பு

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிற்கும் திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமாவிற்கும் இடையே நேரடிச் சந்திப்பொன்று நிகழ்ந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. வெள்ளை மாளிகையில் பிரத்தியேகமான ஓர் இடத்தில் இந்த சந்திப்பு சுமார் 45 நிமிடங்கள் நடைபெற்றுள்ளது.

திபெத்தில் நிலவி வருகின்ற மனித உரிமை மீறல்கள் குறித்தான தலாய்லாமாவின் போராட்டம் குறித்து ஜனாதிபதி ஒபாமா தனது ஆதரவை இச்சந்திப்பின்போது தெரிவித்துள்ளார். சீனாவின் ஒரு பகுதியாக உள்ள திபெத்தில் சீன ஆட்சியாளர்கள் மனித உரிமை மீறல்களை மேற்கொள்வதாகக் கூறி சர்வதேச அளவில் பிரச்சாரங்களை தலாய்லாமா மேற்கொண்டு வருகின்றார்.

முன்னதாக தலாய்லாமாவை ஒபாமா சந்திக்கக்கூடாது என்று அமெரிக்காவிடம் சீனா கேட்டுக்கொண்டிருந்தது. அப்படியிருந்தபோதிலும் ஒபாமா - தலாய்லாமா சந்திப்பு நிகழ்ந்துள்ளமையால் அதற்கு சீனா தனது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது.

இதனால், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பாதிக்கப்படுமெனவும் சீனா எச்சரித்துள்ளது. இப்பேச்சுவார்த்தையின் பின்னர் கருத்துத் தெரிவித்த ஒபாமா, திபெத்தை எப்போதும் தாம் சீனாவின் ஒரு பகுதியாகவே




கருதுவதாகவும், நிலவுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இரண்டு தரப்பும் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# கடாபி பதவி விலக தயாராகி வருகின்றார்



## பிரான்ஸ் அறிவிப்பு

லிபியாவின் தலைவர் முகம்மட் கடாபி பதவி விலகுவதற்குத் தயாராகி வருவதாக தகவல்கள் கிட்டியிருப்பதாக பிரான்ஸின் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள அவர்: துருக்கி, நியுயோர்க், பெரிஸ் ஆகிய நகரங்களில் கடாபியின் தூதுவர்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாகவும் ஆனால், இவை உத்தியோகப்பூர்வமான பேச்சுவார்த்தைகளாக அமையாது என்றும் புரிந்துணர்வு ஏற்பட்டால் மாத்திரமே இது தொடர்பாக உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடாபிக்கு எதிராகப் போராடிவரும் கிளர்ச்சியாளர்கள் கடாபியின் முக்கிய இடமாகக் கருதப்படும் திரிபோலியை நெருக்கி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## அற்லஸ் கேள்வி - 318

**கேள்வி:** கால்கள் மாற்று சத்திர சிகிச்சையை செய்துள்ள மருத்துவரின் பெயர் என்ன?

சரியான விடை.................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 318,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 316 இன் சரியான விடை: பூதாய்**

பரிசு பெறுவோர்

ஜீ.மோகனதாஸ்,
பனியன் எஸ்டேட், மஸ்கெலியா.

விமல்ராஜ் வினுஷன்,
கணபதிப்பிள்ளை கிராமம்,
செங்கலடி.

இ.வியாகரன்,
முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா.

உலகில் முதல் தடவையாக

# கால்கள் மாற்று சத்திர சிகிச்சை

இரண்டு கால்களுக்கான மாற்று சத்திரசிகிச்சையொன்று ஸ்பெயினில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வாகன விபத்தொன்றில் இரண்டு கால்களையும் இழந்த ஒருவருக்கே இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மருத்துவர் பெட்ரோ கவடஸ் என்பவர் தலைமையிலான மருத்துவக் குழுவினராலேயே இந்த




சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மருத்துவரே 2009 ஆம் ஆண்டில் முதல் தடவையாக தாடை, நாக்கு உட்பட முகமாற்று சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் கால்களுக்கான குறித்த சத்திர சிகிச்சையின் வெற்றி பற்றிய தகவல்களை அறிய ஒருமாத காலமாவது காத்திருக்க வேண்டும் என்றும் கூறப்படுகின்றது.

# நமக்கு தும்மல் ஏதனால் வருகின்றது



தும்மல் ஏற்படுவது சம்பந்தமாக, நாட்டிற்கு நாடு பல கதைகளும் மூட நம்பிக்கைகளும் நிலவி வருகின்றன. தும்மல் ஏற்படுவதை அதிர்ஷ்டத்தின் அறிகுறி என்று பலர் கூற, கெட்ட சகுனத்தின் அறிகுறி என வேறு சிலர் கூறுகின்றனர். ஒருவர் வீட்டை விட்டு வெளியே போகும்போது, அவருக்கு முன்னால் தும்மினால் அது அவருக்குப் பல பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் அவருக்குப் பின்னால் அவர் பார்க்காத போது தும்மினால் அது அதிஷ்டத்தின் அறிகுறி என்றும் கூறுவர்.

ஒருவர் தும்மினால் அருகில் உள்ளவர் 'கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்' என கூறுவார். காரணம் தும்மல் துன்பம் வருவதற்குரிய அறிகுறி என எண்ணுவதே ஆகும். இத்தகைய நம்பிக்கைகளில் சில இன்னும் நம்மிடையே பலரிடம் காணப்படுகின்றது. ஆனால், மேற்கூறிய நம்பிக்கைகளில் எவ்வித உண்மைகளும் இருப்பதாகத் தெரியவில்லை. இதனைவிடுத்து மருத்துவ விஞ்ஞான ரீதியில் தும்மல் வருவதற்குரிய காரணத்தை



உரோம் நகர மக்கள் இது சம்பந்தமாக பின்வருமாறு ஒரு கருத்தினை வைத்துள்ளனர். ஒருவர் தும்மினால் அவர் கெட்ட ஆவியை (Evil Spirits) வெளியேற்றுகிறார் என்பதாகும். பழங்காலத்து மக்களோ, தும்முவது இறப்பு வருவதன் அறிகுறி என நம்பினர்.

அறிந்துகொள்ள வேண்டும்.

உயிரியல் முறைப்படி, தும்மல் வருவது எமது விருப்பத்திற்கு உட்படாது இயற்கையாகவே வரும் ஒரு செயற்பாடாகும். மூக்கிலுள்ள கோழைச் சுரப்பிப் படலத்தில் முடிந்துள்ள நரம்பு முனைகளைத் தொல்லையூட்டுவதால் தும்மல் ஏற்படுகிறது. மூக்கிலுள்ள கோழைச் சுரப்பிப் படலம் வீங்கி மொட்டுபோல் தோன்றுவதாலும், சளிப்பிடிப்பதாலும் தும்மல் ஏற்படுகிறது. இவை தவிர தீங்குதரும் நுண்ணிய பொருட்கள் அதாவது, சிறு தூசிகள், துணிக்கைகள், சிறிய பூச்சிகள் போன்றவை மூக்கினுள் செல்வதாலும் தும்மல் ஏற்படுகின்றது. தும்மல் ஏற்படுவதால் சுவாசத்தொகுதியினுள் காற்றுடன் வந்தடைந்து சிரமத்தை தரும் நுண்ணிய பொருட்கள் மீண்டும் காற்றுடன் வெளியேற்றப்படுகின்றன.



அதிக பிரகாசமான வெளிச்சமும் நம் பார்வை நரம்பைத் தூண்டி தும்மலை ஏற்படுத்துகிறது.

தும்மல் வரும்போது, மூக்கின் வழியாக காற்று மணிக்கு சுமார் 160 கி.மீற்றர் வேகத்தில் வெளியேற்றப்படுவதால் உடல் முழுவதும் ஓர் அதிர்வை அது ஏற்படுத்துகிறது. அதேவேளை, கண்கள் தாமாகவே மூடிக்கொள்கின்றன. தும்மலுக்குப் பின்னர் உடல் இலேசாகவும் சுத்தமாகவும் இருப்பதுபோன்ற உணர்வும் ஏற்படுகின்றது.

இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் கால்பந்தாட்ட உலகக் கிண்ணம் ஜப்பான் வசமாகியது



2011 'ஃபிஃபா (Fifa) மகளிர் உலகக் கிண்ண கால்பந்தாட்ட இறுதிப் போட்டியில் 3-1 என்ற கோல்கணக்கில் அமெரிக்காவை தோற்கடித்த ஜப்பான் செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

மேற்படி மகளிருக்கான உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி ஜேர்மனியில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் அமெரிக்கா - ஜப்பான் அணிகள் மோதின. கால்பந்தாட்ட ரசிகர்கள் மத்தியில் இப்போட்டி பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. விறுவிறுப்பாக அமைந்த இப்போட்டியின் ஆட்டநேர முடிவில் இரண்டு அணிகளுமே 1-1 என்ற சம நிலையில் இருந்தமையால் மேலதிக நேரம் வழங்கப்பட்டு அதிலும் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் போட்டன. இதனால், மீண்டும் இரண்டு அணிகளும் 2-2 என்று சமநிலையை காட்டின. இச்சந்தர்ப்பத்தில் முடிவைத் தீர்மானிக்கும்பொருட்டு இரண்டு அணிகளுக்கும் 'பெனால்டி' முறை வழங்கப்பட்டமையால் இதில் ஜப்பான் 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி செம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

# உள்ளூர் மாகாணப் போட்டிகளில் சிரேஷ்ட வீரர்களுக்கு ஓய்வு



அவுஸ்திரேலியாவிற்கு எதிராக அடுத்தமாதம் இலங்கையில் நடைபெறவுள்ள டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தொடர்களில் பங்குபற்றுவதற்குத் தேவையான ஓய்வை எடுப்பதற்காக, இலங்கை அணியின் சிரேஷ்ட வீரர்கள் ஐந்து பேருக்கு உள்ளூர் மாகாண மட்டத்திலான 'டுவென்டி டுவென்டி' போட்டிகளில் கலந்துகொள்ளாமல் இருப்பதற்கான அனுமதியை இலங்கை கிரிக்கெட் சபை வழங்கியுள்ளது.

இருப்பினும் இவர்கள் விரும்பினால் மாத்திரம் மாகாண மட்ட 'டுவென்டி டுவென்டி'யில் ஒன்றோ, இரண்டோ போட்டிகளில் கலந்துகொள்ள முடியும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திலகரட்ண டில்ஷான், மஹேல ஜயவர்தன, சங்கக்கார, என்ஜலோ மெத்யூஸ், லசித் மாலிங்க ஆகியோரே இவ்வாறு மாகாண மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளாதவர்களாவார்.

மேற்படி மாகாண மட்டத்திலான போட்டிகள் இம்மாதம் 21 ஆம் திகதி ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருப்பதாக அறிவித்திருந்த கிரிக்கெட் சபை இப்போட்டியின் அரையிறுதிப் போட்டி 30 ஆம் திகதியும், இறுதிப் போட்டி 31 ஆம் திகதியும் நடைபெறும் என்று அறிவித்துள்ளது.

## நடுவர் ஹார்ப்பர் அதிருப்தி...!



தனது நடுவர் பணி குறித்து விமர்சனம் செய்துள்ள இந்திய கிரிக்கெட் சபைமீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார் அவுஸ்திரேலியாவின் நடுவர் ஹார்ப்பர்.

இந்தியா-மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையே நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியின்போது, நடுவராக கடமையாற்றிய ஹார்ப்பரின் தீர்ப்புக்கள், செயற்பாடுகள் குறித்து இந்திய அணியின் தலைவர் டோனி தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தார். டோனியின் கருத்துக்களுக்கு இந்திய கிரிக்கெட் சபையும் பக்கபலமாக இருப்பது போல் நடந்துகொண்டது. இதன் பிரதிபலிப்பாக, மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் நடுவர் ஹார்ப்பருக்கு நடுவராகப் பணியாற்ற வாய்ப்பு வழங்கப்படவில்லை. எனவே, தன்னை இவ்வாறு விலக்கியமை குறித்து கருத்துத் தெரிவித்துள்ளபோதே, நடுவர் ஹார்ப்பர் இந்திய கிரிக்கெட் சபை மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

# வெற்றி வாய்ப்பு இங்கிலாந்திற்கே



ஷேன் வோர்ன்

இந்திய- இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகின்றது. இத்தொடர் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழல் பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் "4 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இங்கிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் வெற்றியீட்டும்" என்று தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணி வெற்றியீட்டும் என்று அவர் கூறுவதற்கான காரணங்கள் வருமாறு;

"டோனி தலைமையிலான இந்திய அணியை விட, ஸ்ட்ராஸ் தலைமையிலான இங்கிலாந்து அணி பலம் பொருந்திய அணியாக உள்ளது. ஆனாலும், இங்கிலாந்து அணி வெற்றிகளை ஈட்டுவதற்கு தாக்குதல் பாணியில் விளையாடவேண்டும். ஒரு சிறு சந்தர்ப்பத்தைக்கூட இந்திய அணிக்கு வழங்கிடுவார்களாயின் அதன்வழியே இந்திய அணி கிளர்ந்தெழுந்துவிடும். இத்தகைய வாய்ப்பை இங்கிலாந்து அணியினர் இந்திய அணியினருக்கு வழங்காது விட்டால் தாய்நாட்டு ரசிகர்களின் கரகோஷ ஆதரவுடன் தொடரை வெல்ல முடியும்" என்று ஷேன்வோர்ன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் "இயன்பெல், அலெஸ்டர் ஸ்ட்ராஸ், பீற்றர்சன் ஆகியோரின் திறமை இந்திய வீரர்களை விட முன்னிலையில் இருப்பதும் இங்கிலாந்து அணிக்கு சாதகமான அம்சங்கள்" என்றும் வோர்ன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# தரப்பட்டியலில் இலங்கை பின்னடைவு

ஐ.சி.சி.யின் ஒருநாள் தரப்பட்டியலில் மூன்றாவது இடத்திலிருந்த இலங்கை அணி இங்கிலாந்துடனான ஒருநாள் தொடர் தோல்வியை அடுத்து நான்காவது இடத்திற்கு கீழிறங்கியுள்ளது.

இங்கிலாந்துடனான போட்டிகளுக்கு முன்னதாக இலங்கை அணி 119 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் இருந்தது. ஆனால், இத்தொடரை இழந்ததையடுத்து, மூன்று புள்ளிகளை இழந்து இலங்கை அணி நான்காவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த தரப்பட்டியலில் அவுஸ்திரேலியா 129 புள்ளிகளுடன் முதலாவது இடத்திலும், இந்தியா 119 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், தெ.ஆபிரிக்கா 116 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

டெஸ்ட் தரப்பட்டியலில் 126 புள்ளியுடன் இந்தியா முதலிடத்திலும், 117 புள்ளிகளுடன் தெ.ஆபிரிக்கா இரண்டாவது இடத்திலும், 116 புள்ளிகளுடன் இங்கிலாந்து மூன்றாவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# 2018 ஒலிம்பிக்...

2018 இல் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் தென்கொரியாவில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இம்முடிவினை சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் அறிவித்துள்ளது.


மேற்படி போட்டிகளை நடத்துவதற்கான அனுமதியை கோரி ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளும் போட்டியிட்டிருந்தன. குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை இதற்கு முன்னர் பிரான்ஸ் 3 தடவைகள் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுவரை தென்கொரியா எந்தவொரு குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளையும் நடத்தாத நிலையிலேயே இம்முறை அதற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதற்கமைய, 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி 09 ஆம் திகதி இப்போட்டிகள் ஆரம்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுக்கு மேற்பட்ட சூரியன்களைக்கொண்ட கிரகங்களில் கறுப்புத் தாவரங்கள்....?





ஒன்றுக்கு மேற்பட்ட சூரியன்களைக் கொண்டுள்ள கிரகங்களில் வளரும் தாவரங்கள் கறுப்பு நிறத்தில் அல்லது கபில நிறத்தில் இருக்கலாம் என சென் என்ட்ரூஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பூமியில் உள்ள தாவரங்கள் சூரியனிலிருந்து கிடைக்கும் ஒளியைப் பயன்படுத்தி ஒளிச் சேர்க்கையில் ஈடுபடுவதனூடாக, பச்சையத்தை உற்பத்தி செய்கின்றன. இதனால், இங்குள்ள தாவரங்கள் பெரும்பாலும் பச்சை நிறத்திலேயே காணப்படுகின்றன. ஆனால், ஒன்றுக்கு மேற்பட்ட நட்சத்திரங்களைக்கொண்ட தொகுதிகளுக்கு உட்பட்டுள்ள கிரகங்கள், குறிப்பிட்ட ஒரு நட்சத்திரத்தின் ஒளியைப் பெறுவதில்லை. மாறாக, அவை பல்வேறு நட்சத்திரங்களிலிருந்தும் ஒளியைப் பெறுகின்றன. அத்துடன், அவை பெறும் ஒளியின் நிறங்களிலும் அளவுகளிலும் மாற்றங்கள் நிலவுகின்றன.

அதன்படி, பல்வேறு நட்சத்திரங்களிலிருந்து பல்வேறுபட்ட ஒளியைப் பெறும் கிரகங்களில் வளரும் தாவரங்கள், பல்வேறுபட்ட ஒளி நிறங்களையே ஒளிச்சேர்க்கை நிகழ்வுக்குப் பயன்படுத்துகின்றன. இதனால், அத்தாவரங்களின் நிறங்களும் மாறுபடுகின்றன. இது பற்றிய ஆய்வினை சென் என்ட்ரூஸ் பல்கலைக்கழகத்தின் ஜெக் ஓ மாலி ஜேம்ஸ் தலைமையிலான குழு மேற்கொண்டிருந்தது.

## எரிகற்கள்



விண்வெளியில் உள்ள கோள்களுக்கு இடைப்பட்ட பகுதிகளில், இருந்தவாறு பல விண்கற்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. இதற்கமைய, செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடையில் அதிகமான விண்கற்கள் சூரியனைச் சுற்றிவருகின்றன. சிறிய தூசு முதல் நூற்றுக்கணக்கான கிலோ மீற்றர்கள் அளவுள்ள கற்களாகவும் இவை காணப்படுகின்றன. இவ்வகையான கற்கள் அநேகமாக, கோள்கள் தோன்றியபோதே தோன்றியிருக்கக் கூடும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். இந்த விண்கற்களில் சில பூமியை நெருங்கும்போது, கவர்ந்திழுக்கப்பட்டு காற்றில் உராய்ந்து எரிகின்றன. இவற்றைத்தான் 'எரிகற்கள்' அல்லது 'எரிநட்சத்திரங்கள்' என்று அழைக்கின்றோம்.

இவை பெரும்பாலும் புவியின் மேற்பரப்பை அடைவதில்லை. வளிமண்டலத்திலேயே எரிந்து சாம்பலாகிவிடுகின்றன. அவ்வாறு எரிந்து சாம்பலாகும் நிகழ்வானது புவியிலிருந்து 80 கிலோ மீற்றர் உயரே வானில் நிகழ்கின்றது. அவ்வாறு வளிமண்டலத்தில் எரிந்து அழிவடையும் எரிகற்களின் தூசுகள் மாத்திரமே புவியை வந்தடைகின்றன. தினமும் இவ்வாறு 27 தொன் அளவு தூசு துணிக்கைகள் புவியில் சேர்கின்றன. அது வருடமொன்றிற்கு 10,040 தொன் தூசு துணிக்கைகள் என்ற ரீதியில் புவியில் சேர்கின்றன. அத்துடன், வளிமண்டலத்தில் எரிந்து சாம்பலாகாமல் புவியை வந்தடையும் பாரிய எரிகற்களும் உள்ளன.

இந்த எரிகற்கள் விண்கற்களின் உடைந்த பாகங்களாகவோ அல்லது சிறுகிரகங்களின் உடைந்த பாகங்களாகவோ உள்ளன. இவற்றில் சிறிய துகள்கள்போல உள்ளவை வால்வெள்ளிகளால் வெளிவிடப்பட்டவை ஆகும். எரிகற்களில் சில மணிக்கு



48,300 கிலோமீற்றர் என்கிற அசுர வேகத்தில் பயணிக்கின்றன. ஆபிரிக்காவின் மேற்கு நமீபியாவின் ஹொபா என்ற கிராமத்தில் விழுந்த எரிகல் தான் உலகில் வீழ்ந்த மிகப்பெரிய எரிகல் என்றும் கூறப்படுகின்றது.



ஹொபாவில் விழுந்த எரிகல்

## முழுவதும் வைரத்திலான கிரகம்





அண்ட வெளியில் உள்ள ஒரு கிரகம் முழுவதும் வைரத்தால் ஆனது என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். சுமார் 4,000 கிலோமீற்றர் பரப்பளவுள்ள இக்கிரகம் முழுக்க முழுக்க வைரக் கல்லாலானது என்று கண்டறியப்பட்டுள்ளது.

சாதாரணமாக, காபன் மூலப்பொருள் இறுக்கமடைந்து பல மில்லியன் ஆண்டுகளுக்குப் பின்னர் வைரக்கல்லாக மாறுகிறது.எனவே, அவ்வாறுதான் இந்தக் கோளும் அதிகமான காபன் வாயுக்களைக் கொண்டிருக்கலாமென்றும் பல மில்லியன் ஆண்டுகள் கடந்த நிலையில் இந்தக் கோள் வைரமாக மாறியிருக்கலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

முழுவதும் வைரத்தாலான இந்தக் கிரகத்தில் உள்ள வைரத்தின் அடர்த்தியோ சுமார் 1 மில்லியன் கெரட் ஆகும். அதன்படி, அக்கிரகத்தில் இருந்து எடுக்கப்படும் ஒரு சிறு துண்டுகூட பூமியில் பல பில்லியன் பெறுமதியாக இருக்கும். ஒரு காலத்தில் எமது சூரியக் குடும்பத்தில் உள்ள சூரியனைப் போல ஒளிர்விட்டு எரிந்த இச்சிறுகிரகம்தான் தற்போது, அணைந்து- மிகவும் குளிர்ந்து - இறுகி வைரக் கட்டியாக மாறியுள்ளதாம்! இக்கிரகம் பூமியில் இருந்து 50 ஒளி ஆண்டுகள் தூரத்தில் இருக்கின்றது. இதைப்பற்றிய விரிவான ஆய்வுகளை நாஸா மேற்கொண்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லிபர்டி தீவு

# அமெரிக்கா - பிரான்ஸ் நட்புறவின் அடையாளமான 'சுதந்திரதேவி சிலை'

*நியூயோர்க் துறைமுகவாயில் பக்கமாக அமைந்துள்ள லிபர்டி தீவில் கம்பீரமாகக் காட்சிதருவதுதான் சுதந்திரதேவி சிலை (Statue of Liberty அல்லது Liberty Enlightening the World). இச்சிலையானது, 1886 ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி நியூயோர்க் நகரில் திறந்துவைக்கப்பட்டது*



பிரான்ஸிலுள்ள சிலை



சுதந்திரதேவி சிலைக்கான காப்புரிமைப் பத்திரம்



சுதந்திரதேவி சிலை திறப்பு விழாவின்போது...

## வரலாறு

அமெரிக்கப் புரட்சியின் போது, ஐக்கிய அமெரிக்காவிற்கும் பிரான்ஸிற்கும் இடையே நிலவிய நட்புறவின் வெளிப்பாட்டினை எடுத்தியம்பும் முகமாகவும் அமெரிக்கா சுதந்திரம் அடைந்து நூற்றாண்டுகள் நிறைவு பெற்றதை சிறப்பிக்கும் வகையிலும் பிரான்ஸ் நாட்டினால் ஐக்கிய அமெரிக்காவிற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டதே இந்த சுதந்திரதேவி சிலை. இது சர்வதேச ரீதியில் நட்பையும் விடுதலையையும் மக்களாட்சியினையும் வெளிப்படுத்தும் சின்னமாகவும் விளங்குவதோடு, தற்போது அமெரிக்காவின் தேசிய சின்னமாகவும் திகழ்கின்றது.

1776 ஜூலை 4 ஆம் திகதி சுதந்திரப் பிரகடனம் செய்து குடியரசானது அமெரிக்கா. அதன் நூற்றாண்டு விழாவான 1876 ஆம் ஆண்டில் இந்தச் சிலையைப் பரிசளித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில், பிரான்ஸில் இதன் நிர்மாணப் பணிகள் தொடங்கப்பட்டாலும், அதற்கான நிதி ஆதாரத்தைப் பெறுவதற்கு இரு நாடுகளும் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. ஏனெனில், அந்தநேரத்தில் இரு நாடுகளிலுமே கடுமையான நிதி நெருக்கடி நிலவியது. எனவே, இவ்விரு நாடுகளும் பலவிதமான போட்டிகள், களியாட்ட நிகழ்வுகள், அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு, கண்காட்சிகள் போன்றவற்றை நடாத்தி அதற்கான நிதியை சேகரித்தன. அதன்பின்னர், பீடத்தினை அமெரிக்காவும் சிலையினை பிரான்ஸும் வடிவமைத்தன.

## நிர்மாணப் பணிகள்

இந்தச் சிலையை நிர்மாணிக்கும் பொறுப்பு ஃபிரெட்ரிக் ஒகஸ்டே பார்த்தோல்டி என்ற பிரான்ஸ் நாட்டு சிற்பிக்கு வழங்கப்பட்டது. சிலையின் உட்புறத்தில் மேற்கொள்ளவேண்டிய கட்டுமானப் பணிக்காக ஐஃபள் கோபுரத்தை உருவாக்கிய அலெக்சாண்டர் குஸ்டவ் ஐஃபளின் ஆதரவும் பெற்றுக்கொள்ளப்பட்டது. இப்பணியில் அவருக்கு மொரீஸ் கோச்சலின் என்ற பொறியியலாளரும் உதவினார்.

1876, ஜூலை 4 ஆம் திகதியளவில் முழுச் சிலையையும் நிர்மாணித்துவிட முடியாவிட்டாலும் தீப்பந்தத்தை ஏந்தியிருக்கும் வலது கையை உருவாக்கும் பணி முடிக்கப்பட்டிருந்தது. எனவே, அந்த ஆண்டிலேயே சிலையின் வலது கை அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஏனைய பகுதிகள் பிரான்ஸில் படிப்படியாகச் செய்யப்பட்டு, பின்னர் அவை வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டு, 24 பெட்டிகளில் கப்பல்கள் மூலம் நியூயோர்க்கிற்கு கொண்டு வரப்பட்டன. 1885, ஜூன் 17 இல் சிலையின் முழுப்பாகங்களும் நியூயோர்க் வந்து சேர்ந்தன. 1876 இல் கொண்டுவரப்பட்ட தீப்பந்தத்தை ஏந்திய வலது கை, அதுவரை நியூயோர்க் நகரிலேயே வைக்கப்பட்டிருந்தது. அத்துடன், பீடத்தின் கட்டுமானப் பணிகள் 1886 ஏப்ரல் 22 ஆம் திகதியளவிலேயே நிறைவுற்றன.

இச்சிலை நிர்மாணத்தில் 90.7 டொன் செம்பும் 113.4 டொன் இரும்பும் பயன்படுத்தப்பட்டுள்ளது. பீடம் நிர்மாணிக்கப்பட்டு அடுத்த நான்கு மாதங்களில் சிலையின் பாகங்கள் முழுமையாகப் பொருத்தப்பட்டு முழுச்சிலையும் உருவாக்கப்பட்டது. ஆரம்பகட்டத்தில் பீடத்தின் கட்டுமானப் பணிக்காக 50,000 டொலர்கள் நிதியை நியூயோர்க் அரசு சார்பாக, அப்போதைய நியூயோர்க் ஆளுநர் க்ரோவர் க்ளீவ்லண்ட் ஒதுக்கியிருந்தார். 1886 ஆம் ஆண்டளவில் அவர் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி வகித்துக்கொண்டிருந்தார். எனவே, அதே ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி இந்தச் சிலை க்ரோவர் க்ளீவ்லண்ட்டால் திறந்து வைக்கப்பட்டது. அமெரிக்க காப்புரிமைச் சட்டப்படி சுதந்திரதேவி சிலையின் வடிவமைப்புக்கு 1877 இல் பார்த்தோல்டி காப்புரிமை பெற்றார்.

சுதந்திரதேவி சிலையை தமது நாட்டுக்கு அன்பளிப்புச் செய்தமைக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக, அமெரிக்க மக்கள் சுதந்திரதேவி சிலை போன்ற மற்றொரு சிலையை உருவாக்கி பிரான்ஸ் மக்களுக்குப் பரிசாகக் கொடுத்தனர். இந்தச் சிலை சுதந்திரதேவி சிலையின் இளைய சகோதரி என்று செல்லமாக அழைக்கப்படுகின்றது.

## சிலையின் தோற்றம்

பண்டைய ரோமில் சுதந்திரத்திற்கான தெய்வமாகக் கொள்ளப்பட்ட லிபர்டஸ் என்ற கடவுளின் வடிவத்தை ஒத்ததாகவே இந்தச் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலை 12 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. அதன் உயரம் 151 அடி. சிலை நிறுவப்பட்டுள்ள பீடத்தின் உயரம் 154 அடி. சிலையின் எடை 252 டொன். ரோம் நகரப் பெண்களின் பாரம்பரிய உடையான ஸ்டோலோவை அணிந்துள்ள நிலையில் இச்சிலை காணப்படுகிறது. இடது கையில் சட்டப் புத்தகத்தைக் ஏந்தியபடி உள்ளது. புத்தகத்தின் முகப்பில் அமெரிக்காவின் சுதந்திரதினத்தைக் குறிக்கும் வகையில் ஜூலை 4, 1776 என்று ரோமன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது. வலது கையில் தீப்பந்தத்தை ஏந்தி நிற்பதுபோல் காணப்படுகின்றது. தீப்பந்தத்தின் உயரம் 42 அடி ஆகும். சிலையின் உள்ளே 354 படிக்கட்டுகளும் 25 ஜன்னல்களும் உள்ளன.

லட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் இச்சிலையினைப் பார்வையிட வருகின்றனர். மென்ஹட்டன் தீவிலிருந்து லிபர்டி தீவிற்குச் சென்றுவர கப்பல், படகுப் போக்குவரத்து வசதிகளும் உள்ளன. 1902 ஆம் ஆண்டு வரை இச் சிலை கலங்கரை விளக்காகப் பயன்படுத்தப்பட்டது. இச்சிலையின் உட்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒற்றை வளைவு படிக்கட்டுகள்மூலம் சுதந்திரதேவி சிலையின் கிரீடத்தை அடைய முடியும். ஒரே நேரத்தில் அங்கிருக்கும் 25 ஜன்னல்கள் வழியாக 30 பேர் நியூயோர்க் நகரைப் பார்வையிடலாம்.





ஃபிரெட்ரிக் பார்த்தோல்டி



லிபர்டி தீவிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள்



சுதந்திரதேவி சிலையின் இரவுநேரத் தோற்றம்



சிலையின் கிரீடத்திற்குள் சுற்றுலாப் பயணிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்களின் நாரிலிருந்து கார்களை உருவாக்கலாம்!







கார் தயாரிப்பில் பிளாஸ்டிக்கின் பயன்பாடு அதிகளவில் காணப்படுவதனால், அவை சுற்றுச்சூழலை பெரிதும் பாதிக்கின்றன. இவ்வாறு சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் இயற்கை நார்களைப் பயன்படுத்துவது தொடர்பாகப் பிரேசிலின் விவசாய அறிவியல் பல்கலைக் கழகத்தில் எல்சிடஸ் லியோ என்ற விஞ்ஞானியொருவரின் தலைமையில் மேற்கொள்ளப் பட்ட ஆராய்ச்சியின்படி; வாழைப்பழம், அன்னாசி போன்ற பழங்களில் இருந்து பெறப்படும் நார் இழைகள் இதற்குப் பெரிதும் உகந்தது என்று கண்டறியப்பட்டுள்ளது.

இப்பழங்களில் இருந்து தயாரிக்கப்படும் 'நானோ செலுலோஸ்' இழைகளைப் பயன்படுத்தி கார் ஒன்றின் பல பாகங்களைத் தயாரிக்க முடியும் என்றும் இரும்பு, மெட்டல் ஆசனங்களுக்குப் பதிலாக எடை குறைந்த நார் இழைகளைப் பயன்படுத்துவதன்மூலம் காரின் எடை வெகுவாகக் குறையும் என்பதோடு, எரிபொருள் செலவும் பலமடங்கு மிகுதியாகும் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

தற்போது கார்களில் பயன்படுத்தப் படும் பிளாஸ்டிக் பொருட்கள் அதிக வெப்பத்தில் உருகிவிடுவதோடு, பெற்றோல், டீசல் கசிவு காரணமாக, தீப்பிடித்தால் அவையும் சேர்ந்து எரியும் ஆபத்துக்களும் உண்டு. ஆனால், பழங்களின் நார்களைக் கொண்டு தயாரிக்கும் கார்களில் இவ்வகையான ஆபத்துக்கள் தவிர்க்கப்படலாம் என்றும் பழ நார்களில் உறுதித்தன்மை குறித்து நடாத்தப் படும் ஆராய்ச்சி முடிவடைந்த பின்னர் இவ்வகையாக கார்கள் அறிமுகமாகலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# எதிரியை இனங்கண்டு தாக்கும் எறும்புகள்




'டெம்னோ டரக்ஸ்' எனும் ஒரு வகை எறும்புகள் வசிக்கும் பகுதிக்குள் 'ஸ்லேவ் மேக்கர்' வகையைச் சேர்ந்த எறும்புகள் அடிக்கடி படையெடுத்துச் செல்கின்றன. இந்த எறும்புகள் இரை தேடுவதில் சோம்பேறித்தனம் கொண்டவை. ஆகையால், பிற இன எறும்புகள் சேர்த்து வைத்திருக்கும் உணவுகளை திருடிச் செல்லும் குணாதிசயம் கொண்டவை.

இத்தகைய ஸ்லேவ் மேக்கர் எறும்புகளின் வருகையைக் கண்டதும் டெம்னோ டரக்ஸ் வகை எறும்புகள் ஆக்ரோஷமாக அவற்றைத் தாக்கும். இதனால், ஸ்லேவ் மேக்கர் எறும்புகள் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள அங்கிருந்து பின்வாங்கும். எதிரிகளை அச்சுறுத்தும் எறும்புகள் தங்களது சக்தியை அதிகம் வீணடிப்பதில்லை. எனினும், ஸ்லேவ் மேக்கர் வகை எறும்புகள் உரிய சந்தர்ப்பத்தில் தம்முடைய பலத்தைக் காட்டி உணவை திருடிவிடும் இயல்புடையது. மேலும், ராணி எறும்பு மற்றும் பணியாளர் எறும்புகளையும் அவை கொன்று விடுவதும் உண்டு. இவ்வாறு சோம்பேறி எறும்பினமான ஸ்லேவ் மேக்கர் எறும்புகள் பற்றியும் அவற்றை விரட்டும் டெம்னோ டரக்ஸ் வகை எறும்பு பற்றிய ஆய்வு விபரங்கள், இயற்கை பாரம்பரியம் குறித்த இதழொன்றில் வெளியாகியுள்ளது.

# ஜப்பானின் புதிய கண்டுபிடிப்பு 'இலாஸ்டிக் நீர்'




நெகிழா தன்மை கொண்ட பிளாஸ்டிக் பொருளுக்கு மாற்றீடாக, நீரையே பிளாஸ்டிக்காகப் பயன்படுத்தக்கூடிய வழிமுறை ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர் ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள். மீள்சுழற்சி செய்து பயன்படுத்த முடியாமையால் பிளாஸ்டிக் கழிவுகள், சமூக வாழ்வுக்குப் பெரும் சவாலாகவும் தீங்காகவும் இருந்து வருகின்றது. இதன் காரணமாகவே, புவி அதிகளவில் வெப்பமடைந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

டோக்கியோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களது ஆய்வின் படி, இந்த இலாஸ்டிக் நீர் (Elastic Water) நெகிழும் நீர் பிளாஸ்டிக்காகப் பயன்படுத்தப்படவுள்ளது. 95 சதவீதம் நீரும் 2 கிராம் களிமண் மற்றும் ஒருசில ரசாயனங்களும் சேர்த்து இது தயாரிக்கப்படுகின்றது. ஒளி ஊடுருவும் தன்மை, நெகிழும் தன்மை, மீள் தன்மை கொண்டதாக இருப்பதனால் மீள்சுழற்சி செய்ய இவை இலகுவானது எனவும் இதனால்,சூழலுக்கு எவ்வித தீங்கும் ஏற்படாது எனவும் கண்டறியப்பட்டுள்ளது.




மருத்துவத்துறையிலும் இந்த இலாஸ்டிக் நீர் பயன்படும் என்பதுதான் இதில் மற்றுமொரு சிறப்பம்சமாகும். பொதுவாக, காயம் பட்ட இடங்கள், அறுவை சிகிச்சைப் பகுதியில் வெட்டப்படும் மேற்றோல், தசைப்பகுதியை உலராமல் பாதுகாப்பதில் இது முக்கிய பங்காற்றுகின்றது. மருத்துவத்திலும் சுற்றுப்புறச் சூழலிலும் பெரிதும் துணைபுரிகின்ற இந்த இலாஸ்டிக் நீர் அண்மைய மிகச்சிறந்த கண்டுபிடிப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

# 'வை-ஃபை' கதிர்வீச்சினால் தாவரங்கள் பாதிப்பு


வை-ஃபை (wi-fi) எனும் கதிர்களினால் தாவரங்களின் வளர்ச்சி பாதிக்கப்படுவதாகவும் அதேநேரம் மனிதர்களுக்கும் இக்கதிர்களினால் பாதிப்புகள் ஏற்படலாம் என்றும் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த வெகனிங்கன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதன்போது, விஞ்ஞானிகள் வெவ்வேறு வகையைச் சேர்ந்த வை-ஃபை வீச்சுக்கதிர்களை 20 மரங்களுக்கு சுமார் 3 மாதங்கள் வரை வழங்கி ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர்.




இந்த ஆராய்ச்சியின்படி, வை-ஃபை கதிர்களுக்கு அருகாமையில் காணப்பட்ட மரங்களின் இலைகள் மிக வேகமாக உதிர்ந்ததுடன், மரங்களில் கசிவு நிலைகளும் தோன்றியதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். மேலும், இந்த ஆய்வினூடாக வெளிப்படும் மின்காந்த அலைகள் சோளப்பயிர்களின் வளர்ச்சியையும் பாதிப்படையச் செய்ததாகவும், இக்கதிர்கள் மனிதனைப் பாதிக்கும் சாத்தியக்கூறுகள் உண்டெனவும் குறிப்பிடுகின்றனர். இவை மாத்திரமன்றி; வாகனங்களில் இருந்து வெளியிடப் படும் புகை மற்றும் கைப்பேசித் தொடர்புக் கோபுரங்களில் இருந்து வெளியேறும் கதிர்கள்கூட, தாவரங்களைப் பாதிப்படையச் செய்கின்றன எனவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஓகஸ்ட் மாதம் தொடக்கம்

# பழைய பிரவுசர் பாவனை முறையை கூகுல் நிறுவனம் நிறுத்தவுள்ளது



இணைய சேவையில் அநேகமானோர் பல்வேறுபட்ட தகவல்களை தேடுவதற்கும் அறிவதற்கும் 'வெப் பிரவுஸர்'களைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், இந்த 'வெப் பிரவுசர்கள்' இன்றைய காலகட்டத்திற்கு எந்தவகையிலும் பொருந்துவதாக இல்லை என்று கூறப்படுகின்றது. எனவேதான் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இன்டர்நெட் எக்ஸ்ஃபுளோரர் 7 (IE7) ஃபயர் ஃபொக்ஸ் 3.5 மற்றும் சஃபாரி 3.0 ஆகிய பழைய வெப்பிரவுஸர்களுக்கு மாற்றீடாக, புதிதாக எக்ஸ்ஃபுளோரர் 9 பிரவுஸரை கூகுல் நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது.

இது குறித்துக் கருத்து தெரிவித்துள்ள கூகுல் நிறுவன அதிகாரிகள் இணையத்தில் இன்றுள்ள இணையப் பாதுகாப்பு தந்திரோபாய செயற்றிட்டங்களுக்கு இந்தப் பழைய பிரவுசர்கள் எந்த வகையிலும் பொருந்துவதாக அமையவில்லை என்றும், இதனால் மிக இலகுவாக 'வைரஸ்' தாக்கங்களுக்கு கணினிகள் ஆளாகிவிடுகின்றன என்றும் குறிப்பிடுவதுடன், மேலும் ஜீமெயில், கூகுல் கெலன்டர் போன்ற சேவைகளின்மூலம் வழங்கப்படுகின்ற விசேட செயற்றிட்டங்களை இந்த பழைய பிரவுசர்களில் பெறவும் முடியாது என்கின்றனர்.

இதற்குக் காரணம், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய செயற்றிட்டங்கள் அனைத்தும் புதிய HTML 5 தொழில்நுட்பத்திற்குப் பொருந்துவதாக இருப்பதும், பழைய வெப்பிரவுசர்கள் இந்த HTML 5 தொழில்நுட்பத்திற்குப் பொருந்தாததாக இருப்பதுமேயாகும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.



முன்னைய இன்டர்நெட் எக்ஸ்ப்புளோரர் 7 வெப்பிரவுஸர் அறிமுகமாகியது 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் 18 ஆம் திகதி ஆகும். ஆனால், இதில் தற்போது புதிதாக அறிமுகமாகியிருப்பது இன்டர்நெட் எக்ஸ்ஃபுளோரர் 9 ஆகும். இருப்பினும், உலகம் பூராகவும் உள்ள இணைய பாவனையாளர்களில் 8.73 வீதமானோர் தற்போதும் இன்டர்நெட் எக்ஸ்ஃபுளோரர் 7ஐத் தான் பயன்படுத்தி வருகின்றனர். அதுமட்டுமன்றி, தற்போது அறிமுகமாகியுள்ள 4.0 ஃபயர் ஃபொக்ஸைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக ஏராளமானோர் இன்றுவரை 2009 ஆம் ஆண்டில் அறிமுகமாகிய 3.5 ஃபயர்ஃபொக்ஸையே பயன்படுத்துகின்றனர். இவ்வாறே, சஃபாரி 3 வெப்பிரவுஸர் 2009 மே மாதம் அறிமுகமாகியிருந்தது. எனினும், தற்போது அறிமுகமாகியுள்ள சஃபாரி 5 புதிய பிரவுஸருக்குப் பதிலாக பழைய 3 பிரவுஸரையே ஏராளமானவர்கள் தற்போதும் பயன்படுத்துகின்றனர்.







இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் உலகம் பூராகவும் உள்ள இணைய பாவனையாளர்களில் கணிசமானவர்கள் இன்றைய காலத்திற்குப் பொருத்தமற்ற வெப் பிரவுஸர்களையே பயன்படுத்துகின்றனர் என்பது தெளிவாகின்றது. எனவே, இவர்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாக புதிய பிரவுஸர்களின் பயன்பாட்டாளர்களாக மாற்றுவதற்கு ஒரே வழி, இந்தப் பழைய பிரவுஸர்களை செயல் இழக்கச் செய்து, புதிய பிரவுஸர்களைப் பயன்படுத்துவதற்கான கட்டாய நிலையைத் தோற்றுவிப்பதேயாகும். இதன் காரணமாகவே, கூகுல் நிறுவனம் ஓகஸ்ட் 1 ஆம் திகதியிலிருந்து இந்த பழைய பிரவுஸர் பயன்பாட்டு முறையை நிறுத்தவுள்ளது. ஆனால், இணைய பாவனையாளர்கள் இதனையிட்டு அச்சம் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில், இந்தப் புதிய பிரவுஸர்களை இவர்கள் தமது கணினியில் இலவசமாக டவுன்லோட் செய்து இன்ஸ்டோல் செய்துகொள்ள முடியும். அதற்கு அதிக காலநேரமும் ஆகாது. ஒரு சில நிமிடங்களே செலவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, ஜூலை மாதம் 27 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday July 27, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org